வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 03 27.12.2021 திங்கட்கிழமை இதழ் : 22 பக்கங்கள் : 16

மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மனிகிறாம் பணப்பரிமாற்றம்
Ria Money Transfer றியா பணப்பரிமாற்றம்
Western Union வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

# நிரந்தர பௌத்த அடையாளங்கள் குருந்தூர்மலையில் நிர்மாணம்!

## நீதிமன்ற கட்டளையை மீறி முன்னெடுப்பு





முல்லைத்தீவு, டிசெம்பர் 27

குருந்தூர்மலையில் பௌத்த அடையாளங்களை நிரந்தரமாக நிறுவும் கட்டுமானப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. அத்துடன், வரலாற்று தொன்மை வாய்ந்தவை என்று நிரூபிப்பதற்கான முன்னேற்பாடுகளுடன் அந்த வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்று ஆதாரங்களுடன் தகவல்கள் வெளியாகியுள்ளன. 15

## அரசாங்கம் தாங்களே உருவாக்கிய பேரழிவுகளால் நாட்டை அழிக்கிறது!

### எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 27

தற்போதைய அரசாங்கம் இயற்கை அனர்த்தத்திற்குப் பதிலாக, தாங்களே உருவாக்கிய பேரழிவைக் கொண்டு நாட்டை அழிவுக்கு இட்டுச் சென்றுள்ளது - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் 15

## பேருந்து கட்டணங்கள் அடுத்த வாரம் எகிறும்!

கண்டி, டிசெ. 27

பேருந்து கட்டணங்கள் அடுத்த வாரம் அதிகரிக்கப்படும் என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம உறுதிப்படுத்தியுள்ளார்.

கண்டி, அங்கும்புரவில் நேற்று செய்தியாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே இராஜாங்க அமைச்சர் இதனைக் கூறினார்.

அத்துடன், 15

## வெளிநாட்டவரை திருமணம் செய்வதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி அவசியம்!

கொழும்பு, டிசெ. 27

இலங்கைப் பிரஜைகள், வெளிநாட்டவரைத் திருமணம் செய்வதற்கு பாதுகாப்பு அமைச்சிடம் விசேட பாதுகாப்பு அறிக்கையை பெற வேண்டும் என்று பதிவாளர் நாயகம் திணைக்களம் அறிவித்துள்ளது.

இலங்கைப் பிரஜைகள், வெளிநாட்டவரை திருணம் செய்யும் போது முதலில் வெளிநாட்டவர் 15



ஆழிப்பேரலை அனர்த்தம் காவுகொண்டவர்களின் 17ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று நாடு முழுவதும் அனுஷ்டிக்கப்பட்டது.
இடம் – யாழ்ப்பாணம் – உடுத்துறை
படம் – வடமராட்சி நிருபர்

### சுனாமி அழிவின் 17 ஆண்டு நிறைவு:

## உறவுகள் கண்ணீர்விட்டு கதறியழ உணர்வுபூர்வமாக நேற்று அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 27

சுனாமி பேரனர்த்தத்தில் உயிரிழந்தவர்களின் 17ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று நாடு முழுவதும் அனுஷ்டிக்கப்பட்டது. தமது உறவுகளின் நினைவிடங்களில் கண்ணீர்விட்டு கதறியழுது - அவர்களுக்கு படையில்கள் இட்டும் மக்கள் உயிரிழந் 15

## மாணிக்கவிநாயகம் காலமானார்!

சென்னை, டிசெ. 27



பிரபல தென்னிந்திய திரையிசைப் பாடகரும் பக்தியிசைப் பாடகரும் இசையமைப்பாளருமான மாணிக்கவிநாயகம் நேற்று காலமானார்.

பல நூற்றுக்கணக்கான பக்திப்பாடல்களைப் பாடிய அவர், ஈழத்தில் தமிழரின் விடுதலை போராட்டம் சார்ந்த பாடல்கள், ஈழத்து ஆலயங்கள் 15

## தொற்றுக்கு 13 பேர் பலி!

கொழும்பு, டிசெ. 27

கொரோனா தொற்றால் நேற்று முன்தினம் மட்டும் 13 பேர் உயிரிழந்தனர் என்று அரசாங்க தகவல் திணைக்களம் நேற்று அறிவித்தது.

30 - 59 வயது பிரிவை சேர்ந்த இரு ஆண்கள், இரு 15

## சுற்றுலா சென்ற குழுக்கள் மோதல்! ஆனைக்கோட்டை இளைஞன் பலி!!

### கௌதாரிமுனையில் நேற்று சம்பவம்

மானிப்பாய், டிசெ. 27

கௌதாரிமுனையில் விருந்தில் பங்கேற்ற யாழ்ப்பாணத்தை சேர்ந்த இரு குழுக்களிடையே ஏற்பட்ட மோதலில் இளைஞர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் குத்திப் படுகொலை செய்யப்பட்டார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் யாழ்ப்பாணம் - ஆனைக்கோட்டை - சோமசுந்தரம் வீதியை சேர்ந்த நிரஞ்சன் நிரோசன் (வயது 22) என்று அறிய வருகின்றது. 15

# வங்குரோத்து நிலையை எட்டும் அபாயத்தில் நாடு!

## சம்பிக்க எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 27

நாடு மிக விரைவில் வங்குரோத்து நிலையை அடையும் அபாயத்தில் உள்ளது. நாட்டைக் காப்பாற்றி முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கான திட்டம், அடுத்த வருட ஆரம்பத்தில் முன்வைக்கப்படும் என்று, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்துரைத்த அவர்,

தற்போதைய நிலையில் பொது வேட்டபாளர் தொடர்பில் கதைக்காது நாடு தற்போது எதிர்கொண்டு இருக்கும் நிலைமையிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கான பொது வேலைத்திட்டங்கள் தொடர்பிலேயே சிந்திக்க வேண்டும்.

கடன் நெருக்கடியிலிருந்து நாட்டை எவ்வாறு மீட்டெடுப்பது என்பதுத் தொடர்பிலான பொதுவான திட்டத்தை, ஜனவரி மாதம் முன்வைப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்வதற்கு காலதாமதமாகிவிட்டது. அரசாங்கம் கூறுவதை போன்றல்லாது நாட்டில் பொருளாதார நெருக்கடி அதிகரித்துள்ளது. சர்வதேச நாணய நிதியத்துக்கு சென்றால் அவர்கள் நிதி ஆலோசகர்களை நியமிப்பதையே முதல்கட்ட பணியாக முன்னெடுப்பார்கள். எமக்கு கடன் வழங்கிய நாடுகள் மற்றும் அமைப்புகளுடன் கலந்துரையாடுவார்கள். அதன்போது நாம் வங்குரோத்து நிலையை அடைந்ததை ஏற்றுக்கொள்ள நேரிடும். அது உறுதிப்படுத்தப்படும்.

மத்திய வங்கி விசித்திரமான கதைகளைக் கூறினாலும் இலங்கையில் என்ன நடக்கின்றது என்பதை உலக நாடுகள் நன்கு அறியும் என்று மேலும் தெரிவித்துள்ளார்.

# விருந்துமுடிந்து சென்றவர் கிணற்றில் சடலமாக மீட்பு

## இளவாலையில் நேற்று துயரம்

யாழ்ப்பாணம், டிசெ. 27

இளவாலை சந்தியில் உள்ள காணிக் கிணறு ஒன்றிலிருந்து இளைஞர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் கிளரின் கொல்வின் (வயது- 32) என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் சிலருடன் இணைந்து விருந்தில் கலந்து கொண்டிருந்த குறித்த இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது.

இளைஞர் திட்டமிட்டு கொல்லப்பட்டாரா அல்லது தற்கொலை செய்து கொண்டாரா என்ற கோணங்களில் விசாரணைகளை இடம்பெற்ற வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(ஐ)



# தமிழர் கலை வரலாற்றில் புலிகள் காலம் பொற்காலம்!

## சிறீதரன் எம். பி.

கிளிநொச்சி, டிசெ. 27

தமிழர்களின் கலை வரலாற்றில் தமிழீழ விடுதலைப் புலிகளின் காலம் பொற்காலம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

அண்மையில் இடம்பெற்ற கலாலயத்தின் வெளியீடான ‘விழுதொலிகள்’ இறுவெட்டு வெளியீட்டு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், போர் முடிந்ததன் பின்னரான காலப்பகுதியில் கலைஞர்கள் தங்களின் படைப்புக்களுக்கு உரித்தான அந்தஸ்து கிடைப்பதில்லை என்பதான ஒரு குற்றச்சாட்டு கலைஞர்களால் முன்வைக்கப்பட்டிருக்கிறது.

“உண்மைதான், எம்மவர்கள் இந்த மண்ணில் இருந்தபோது கலைகளையும் கலைஞர்களையும் வளர்க்க விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் என்ற பிரிவு உருவாக்கப்பட்டு, அதனூடாக பாரம்பரிய கலைகளையும் பண்பாட்டையும் வளர்த்திருந்தார்கள். தமிழர்களின் கலை வரலாற்றில் தமிழீழ விடுதலைப் புலிகளின் காலமே பொற்காலம் ஆகும்.

‘கலைஞர்களும் தமிழர்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஆற்றிய பங்கும் மகத்தானது. தங்களின் கலைப் படைப்புக்களால் போராட்டத்தின் பக்கம் மக்களை எழுச்சி கொள்ள வைத்தவர்கள் என்றால் மிகையில்லை. கலைஞர்களும் இந்த மண்ணில் மீளும் சிறப்பாக உரிய அந்தஸ்தோடு வாழும் காலம் உருவாக்கப்படும்’ என்றும் அவர் கூறினார். (ஐ)

# குளத்திலிருந்து இளைஞன் சடலமாக மீட்பு!

வவுனியா, டிசெ. 27

செட்டிக்குளம், கலாசியம் பலாவ தம்பனைக்குளத்தில் இருந்து இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக செட்டிக்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். நேற்று மாலை குளத்திற்கு சென்றவர்கள் சடலம் ஒன்று மிதப்பதை அவதானித்து பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்ட இளைஞர் வீட்டில் இருந்து நேற்றையதினம் நண்பர்களுடன் சென்ற நிலையில் வீடு திரும்பவில்லை. குறித்த இளைஞரை அவரின் வீட்டார் தேடி வந்த நிலையிலேயே குளத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்டவர் வவுனியா, செட்டிகுளம், தம்பனைக்குளம் பகுதியைச் சேர்ந்த ஹரிந்து கோசல்யுஸ் வெத்தியாராச்சி (வயது 24) என்பவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

# காரைநகர் சபை தவிசாளர் தெரிவு வியாழனன்று

யாழ்ப்பாணம், டிசெ. 27

காரைநகர் பிரதேச சபை தவிசாளர் தெரிவு எதிர்வரும் 30ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வர்த்தமானி அறிவித்தல் மூலம் வட மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் டிரஞ்சனால் குறித்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக இரு வரவு - செலவுத் திட்டங்கள் தோற்கடிக்கப்பட்டதை அடுத்து தவிசாளர் பதவியிழந்தமையை தொடர்ந்தே புதிய தவிசாளர் தெரிவு இடம்பெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கல்வி tv CHANNEL-1

27.12.2021
திங்கட்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

## கல்வி tv CHANNEL - 2

27.12.2021
திங்கட்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
27.12.2021 திங்கட்கிழமை
பிலவ வருடம், மார்கழி 12

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம் உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

editor@eelanadu.lk, eelanaduweekly@gmail.com, news@eelanadu.lk
021 730 1370

# விடயங்களை எவ்வாறு புரிந்துகொள்வது?

தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் அனைவரும் ஒரு பொதுப் புள்ளியில் சந்திக்க வேண்டும் - இல்லாவிட்டால் தமிழ்த் தேசிய இனத்தின் இருப்புக்கு எதிரான சவால்களை எதிர்கொள்ள முடியாது. கடந்த 12 வருடகால அரசியல் நகர்வுகளை உற்று நோக்கினால், இவ்வாறானதொரு கோரிக்கையே அனைத்து தரப்பினராலும் முன்வைக்கப்பட்டிருக்கின்றது. இதற்கான பல்வேறு முயற்சிகளும் கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. எனினும், அனைத்து கட்சிகளையும் ஒரு புள்ளியில் சந்திக்கச் செய்வதில் குறிப்பிடத்தகு வெற்றியை பெறமுடியவில்லை. இவ்வாறானதொரு பின்னணியில்தான், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பங்காளிகளில் ஒன்றான, ரெலொவின் முயற்சியால் நீண்ட காலத்திற்கு பின்னர் ஒரு நகர்வு இடம்பெற்றிருக்கின்றது. வரலாற்றில் முதன்முறையாக தமிழ் பேசும் மக்களின் பிரச்னை என்னும் அடிப்படையில், மலையக மற்றும் முஸ்லிம் கட்சிகளும் இந்த முயற்சியோடு தங்களை இணைத்திருக்கின்றனர்.

ஆனாலும் பொதுவாகக் காணப்படும் விமர்சனங்கள், எதிர்ப்புக்களை இப்போதும் காணமுடிகின்றது. ஆக்கபூர்வமான விமர்சனங்கள் அவசியம். விமர்சனங்களால்தான் ஜனநாயக அரசியல் செழுமைப்படுகின்றது. ஆனால், ஒரு விடயத்தை எப்படியாவது எதிர்க்க வேண்டும் என்பதற்காகவே - விமர்சனங்களை முன்வைக்கக்கூடாது. தமிழ் அரசியல் சூழலில் முன்வைக்கப்படும் சிலதரப்பு விமர்சனங்களை உற்று நோக்கினால், அவைகள் விமர்சனங்கள் என்னும் பெயரில் முன்வைக்கப்படும் கற்பனைகளாகும். எப்படியாவது விடயங்களை குழப்பிவிட வேண்டும் என்னும் முனைப்பே அங்கு மேலோங்கியிருக்கின்றது. ஆனால், அவ்வாறானவர்களிடம் ஒரு மாற்று உபாயம் இல்லை. ஒரு விடயத்தை சாதாரணமாக எதிர்ப்பது மாற்று திட்டமாகாது.

2009இற்கு முன்னரான அரசியல் போக்குக்கும், 2009இற்கு பின்னரான அரசியல் போக்கிற்கும் இடையில் ஒரு அடிப்படையான வேறுபாடுண்டு. 2009இற்கு முன்னர், தமிழர்களிடம் ஒரு பலம் இருந்தது. ஆனால், 2009இற்கு பின்னரான அரசியல் சூழலில் முன்னெடுக்கப்பட்ட - பேசப்பட்ட எந்தவொரு விடயமும், தமிழர்களின் சொந்த பலத்தின் மீதான நம்பிக்கையிலிருந்து வரவில்லை. வெளியாரின் தலையீடுகள் மீதான நம்பிக்கையே தமிழ்த் தேசிய அரசியலின் முதலீடாக இருந்தது. அதாவது, இந்தியா, அமெரிக்கா, ஐக்கிய நாடுகள் சபை, ஐரோப்பிய ஒன்றிம். 2012இல், இலங்கையின் மீதான மனித உரிமைகள் பேரவையின் பிரேரணை நிறைவேற்றப்பட்ட காலத்திலிருந்து, வெளியாரை நோக்கியே அனைத்து கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டிருந்தன. வெளியாரை நோக்கி கோரிக்கை முன்வைப்பதில் தமிழர் தாயகத்தில், தமிழ்த் தேசிய நிலைப்பாட்டின் அடிப்படையில் செயல்படும் எந்தவொரு கட்சிகளுக்குமிடையில் முரண்பாடுகள் இருந்திருக்கவில்லை. சிறீலங்கா அரசாங்கத்தை முழுமையாக நம்பிச் செயல்பட முடியும், சர்வதேச அழுத்தங்கள் தேவையில்லை என்று எந்தவொரு கட்சியும் வாதிடவில்லை. தங்களுக்குள் மோதவில்லை.

இப்போதும் அதுதான் நடக்கின்றது. மேற்கு நோக்கி இதுவரையில் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டது போன்று, ஈழத் தமிழர்களின் உடனடி பேரரசான இந்தியாவை நோக்கி கோரிக்கையொன்றை முன்வைக்க முயற்சிக்கின்றனர். இந்தியாவை நோக்கி ஒரு கோரிக்கையை முன்வைக்கும்போது - அது எந்த அடிப்படையில் இருக்க முடியும்? இந்தியா தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்ற, இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் விளைவான, 13ஆவது திருத்தச்சட்டத்தின் அடிப்படையில்தானே அதனை கோர முடியும்! அமெரிக்காவை நோக்கிய தமிழர் கோரிக்கைகள் மனித உரிமைகளின் அடிப்படையில் இருக்கின்றது ஏன்?

அமெரிக்காவின் வெளிவிவகார கொள்கையில் உலகளாவிய ரீதியில் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் விடயம் முதன்மைப்படுத்தப்பட்டிருக்கின்றது. அந்த அடிப்படையில்தான் அமெரிக்கா ஏனைய நாடுகளின் உள்விவகாரங்களில் தலையீடு செய்துவருகின்றது. அதனால், அமெரிக்கா முதன்மைப்படுத்தும் ஒரு விடயத்தின் அடிப்படையில்தான் அவர்களிடம் செல்கின்றோம். அதேபோன்றுதான், இந்தியா தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்ற ஒரு விடயத்துடன் இந்தியாவை நோக்கிச் செல்கின்றனர். தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் முயற்சிகளை இந்த அடிப்படையில்தான் புரிந்துகொள்ள வேண்டும். இதற்கு கட்சிகள் மட்டுமல்ல, சிவில் சமூக அமைப்புக்களும் தங்களின் பூரண ஆதரவை வழங்க வேண்டும்.

# அரசியல் - பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கப்போகும் 2022!

**அலசுவது இராஜதந்திரி**

*இலங்கையின் அனைத்துப் பிரதேசங்களையும் சேர்ந்த மக்கள் பொறுத்தது போதும் என்ற நிலையில் தற்போதைய ஆட்சியாளர்கள் குறித்து காணப்படுவதையும் அடுத்த ஆண்டில் இன்றைய அரசு அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் நெருக்கடிகளை எதிர்நோக்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றே கருத வேண்டியுள்ளது.*

*ஒரு குழப்பகரமான அரசியல் சூழல் தலைகாட்ட ஆரம்பித்திருக்கும் அதேசமயம் பொருளாதார நெருக்கடி நிலைகூட மோசமடைந்திருக்கக் காணப்படுகின்றது. பொருளாதாரத்தின் உயிரோட்டமாக இருப்பது எரிபொருள் பாவனையாகும். இது விடயத்தில்கூட தகுந்த முகாமைத்துவமின்றி இலங்கையைவிட சின்னஞ்சிறிய நாடான சிங்கப்பூரிடமிருந்து மசகு எண்ணெயை கடனடிப்படையில் பெறுவதற்கு இலங்கை முன்வந்துள்ளமை வெட்கித்தலைகுனிய வைக்கும் ஒரு நடவடிக்கையாக இருக்கின்றது.*

*சிங்கப்பூர் எண்ணெய்வளம் கொண்ட நாடல்ல. ஆனால், தென்கிழக்காசிய பிராந்தியத்தில் கப்பல் மற்றும் விமான போக்குவரத்துக்கான கேந்திர முக்கியத்துவம் மிக்க நாடாக சிங்கப்பூர் விளங்குகின்றது. சிங்கப்பூர் தனது உள்நாட்டுத் தேவைக்காகவும் சர்வதேச போக்குவரத்தை கையாளும் விதத்திலும் எரிபொருளை நன்கு திட்டமிட்ட முறையில் சேமித்து வைத்துள்ளது. திரவ எரிபொருள் மாத்திரமல்ல. சமையல் எரிவாயு போன்றவற்றையும் சிங்கப்பூர் தகுந்த முறையில் சேமித்து வைத்துள்ளது. ஆனால், இலங்கையிடம் சிங்கப்பூரில் காணப்படுவது போன்ற எரிபொருளை சேமிக்கும் நடைமுறை காணப்படாத காரணத்தினால் ‘கப்பல் பார்த்த’ கதையாகவே நாட்டு நடப்பு காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது.*

*இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்னரே கப்பல், மற்றும் விமானப் போக்குவரத்துக்கான அனைத்து அடிப்படை வசதிகளும் பிரிட்டிஷாரினால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால், திருகோணமலையிலுள்ள கப்பல் போக்குவரத்துடன்கூடிய எண்ணெய்க் குதங்கள் கைவிடப்பட்ட நிலையில், இலங்கை எரிபொருள் சேமிப்பு சம்பந்தமாக ஒரு நிரந்தர திட்டத்தை கொண்டிராததை அவதானிக்க முடிகின்றது.*

*எரிபொருள் சார்ந்த பொருளாதார விடயத்தில் மாத்திரமல்ல. அரசியல் ரீதியாகக்கூட சிங்கப்பூரின் ஸ்தாபகர் லீ குவான் யூ ஏற்படுத்திக் கொடுத்த கட்டமைப்பு இன்று அந்தச் சின்னஞ் சிறு நாட்டை சர்வதேச அரங்கில் தலைநிமிர்ந்து நிற்க வைத்துள்ளது.*

*அதீத கடன் சுமை நியூயோர்க்கிலிருந்து இயங்கும் Fitch Tradings நிறுவனம் இலங்கையின் ஒட்டுமொத்த பொருளாதார நிலைமையை தரவிறக்கம் செய்வதற்கு முக்கிய காரணமாக இருந்தது. அதேசமயம், தற்போது இலங்கையின் வங்கி நடவடிக்கைகளையும் அந்த நிறுவனம் தரவிறக்கம் செய்ய முன்வந்துள்ளது. இதன்மூலம் வங்கி நடவடிக்கைகள் தொடர்பாக மேலும், நெருக்கடி நிலை ஏற்பட்டு நாட்டில் பெரும்பான்மை சேமிப்பாளர்களாக இருக்கும் நிரந்தர வைப்பிலிட்டோர் வட்டி வீதங்களின் குறைவால் பெரும் சிக்கல்களை எதிர்நோக்க வேண்டிய நிலை தோன்றும். ஏற்கனவே வங்கி வட்டிவீதங்கள் மிகவும் குறைவடைந்த நிலையிலேயே இருக்கின்றன.*

*கடந்த இரு வருடங்களாக உலக பொருளாதாரத்தை கோவிட்- 19 அனர்த்தம் பெரும் பாதிப்புக்கு உட்படுத்தியிருந்தது. இருப்பினும் பாதிப்புகளை எதிர்நோக்கும் விதத்தில் உலக நாடுகள் பலவும் தமது பொருளாதாரத்தை நல்ல முறையில் திட்டமிட்டிருந்தன. இது விடயத்தில் சிறிய சிங்கப்பூரும் நல்ல முன்னுதாரணமாக இருந்துள்ளமையே அந்நாட்டிடமிருந்து இலங்கை மசகு எண்ணெயை கடன் அடிப்படையில் பெறுவதற்கு முன்வந்துள்ளமை எடுத்துக்காட்டுகின்றது.*

*இந்நிலையில், ஏற்கனவே நாட்டு மக்கள் தமது அதிருப்தியை இன்றைய அரசாங்கம் தொடர்பாக வெளியிட்டு வருபவர்களாக இருக்கின்றனர். ஒரு மாதத்துக்கு முன்னர் தலைநகர் கொழும்பில் இடம்பெற்ற அரசுக்கு எதிரான மாபெரும் பேரணி மக்களின் அதிருப்தியை பெரியளவில் எடுத்துக்காட்டியிருந்தது.*

*அரசாங்கத்தில் அங்கம் வகிப்பவர்களே உரிய பொருளாதாரத்திட்டம் ஆட்சி அதிகாரத்திலிருப்போரிடமில்லை என்பதை சுட்டிக்காட்டியுள்ளனர்.*

*இன்றைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவிக்கு வந்ததுமே அரசியல், பொருளாதார ரீதியாக நிபுணத்துவமுள்ளோரை ஓரம் கட்டி ஆயுதப்படைகளில் இருந்தோரை முக்கிய பொறுப்புகளில் நியமித்திருந்தார். இதன்காரணமாக சிறந்த அரசியல், பொருளாதார நிபுணத்துவ ஆலோசனைகளை உரிய விதத்தில் பெற்றுக்கொள்ள முடியாத நிலையே அரசுக்கு ஏற்பட்டுள்ளது.*

*இத்தகைய மிகப்பாதகமான சூழ்நிலையிலேயே இலங்கை புதிய 2022ஆம் ஆண்டினுள் பிரவேசிக்க இருக்கின்றது. ஏற்கனவே, எதிர்கட்சிகள் இன்றைய அரசை ஓரங்கட்டுவது விடயத்தில் தீவிரமாக ஆலோசனைகளை மேற்கொண்டு வருகின்றன. இதுவிடயத்தில் ஒன்றுடன் ஒன்று கைகோக்கவும் அவை முன்வந்துள்ளன.*

*இந்நிலையில் புதிய 2022ஆம் ஆண்டு ஆட்சியாளருக்கு மிகுந்த சவால் நிறைந்ததாகவும் நெருக்கடி நிறைந்ததாகவும் இருக்குமென்றே கருதலாம்.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



டிசெம்பர் - 27 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம் - மார்கழி - 12
நல்ல நேரம் : 6.00 - 7.30
ராகு காலம் : 7.30 - 9.00
திதி : திதித்துவயம்



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
பலகாலம் தள்ளிப்போன விஷயம் ஒன்று உங்களது முயற்சியால் முடியும். உற்சாகமான நாள். வீடு வாங்கும் யோகம் வரும். பொன், பொருள் சேர்க்கை உண்டாகும். நிம்மதியான நாள்.

**இடபம்**
நீண்ட கால முயற்சி காரணமாக இன்று பெரிய நன்மை நிகழும். தேவையற்ற கற்பனை காரணமாகத் தளர்ச்சி வேண்டாம். நீங்கள் நினைத்தது நிறைவேறும். உறவினர் உதவி செய்வர்.

**மிதுனம்**
தைரியமாக செயலாற்றி முயற்சியில் வெற்றி காண்பீர்கள். வெற்றி பற்றிய நம்பிக்கை அதிகரிக்கும். இனிய நாள். விருந்தினர்களை உபசரிப்பதில் சந்தோஷம் அடைவீர்கள்.

**கடகம்**
அலைச்சல் இருக்கும். காதலர்களுக்கு மனநிறைவு ஏற்படும். சிறு ஏமாற்றம் வந்து நீங்கும். நேற்றைய மனஅழுத்தம் தீரும். பழைய சம்பவங்களால் ஏற்பட்ட வருத்தம் இன்று முடிவுக்கு வரும்.

**சிம்மம்**
வெற்றிகரமான நாள். அலுவலகப் பணியில் திருப்தி உண்டாகும். புதிய விஷயம் ஒன்றைத் தொடங்கி மனநிறைவு பெறுவீர்கள். மனதிற்கு இனிய நாள். மகனால் ஏற்பட்ட மனவருத்தம் நீங்கும்.

**கன்னி**
உடல்நலம் சீராகும். கடன் பிரச்னைகளை சமாளிப்பீர்கள். நீண்ட நாளாக இருந்த பிரச்னை ஒன்று தீரும். மகிழ்ச்சி கூடும். ரகசியத்தை பகிர்ந்து கொண்ட நபரின் மூலம் தொல்லை வரலாம்.

**துலாம்**
பணியாளர்களுக்கு நல்ல செய்தி ஒன்று வந்து மகிழ்விக்கும். பொறுப்பு அதிகமாகும். எதிரியின் பலவீனத்தைக் கண்டறிவீர்கள். வாழ்வில் முன்னேற்றம் அடைய முயற்சி செய்வீர்கள்.

**விருட்சிகம்**
இன்று மாலை நல்ல செய்தி வரும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். சொத்து பற்றிய பேச்சு வார்த்தை ஒன்று சாதகமாக முடியும். உங்களுக்கு புகழும், விருதும் கிடைக்கும். மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**தனுசு**
உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். வீண் அலைச்சல் முடிவுக்கு வரும். தெய்வ நம்பிக்கை துணை கொண்டு நிம்மதி அடைவீர்கள். மனதில் உற்சாகம் அதிகரிக்கும். நட்பு வட்டம் விரியும்.

**மகரம்**
எதிர்பார்த்த நன்மை தாமதமாகும். பழைய நட்பு புதுப்பிக்கப்படும். கடந்த நாளில் நீங்கள் செய்த செயல்கள் இன்று விளைவை ஏற்படுத்தும். மகான்களின் தரிசனம் கிடைக்கும். எடுத்த முயற்சி திருப்தி.

**கும்பம்**
யாரிடமும் நிதானத்தை இழந்து பேச வேண்டாம். உங்கள் மீது பழி வரக்கூடிய செயலுக்குத் தூண்டுபவரைப் புறக்கணியுங்கள். மூத்தவர்களின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள்.

**மீனம்**
எதிர்பாராத வகையில் நண்பர்களின் சந்திப்பு இன்று நிகழும். மற்றவர்களுக்கு நன்மை தரக்கூடிய செயலைச் செய்வீர்கள். எடுத்த வேலையை முடித்து நிம்மதி அடைவீர்கள். மகிழ்ச்சி கூடும்.

### தைப்புத்தாண்டு:

# முதல்வர் ஸ்டாலின் முயற்சிக்கு முட்டுக்கட்டை போடும் ஆளுநர்?

சென்னை, டிசெ. 27

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தை முதல் நாளை தமிழ்ப் புத்தாண்டாக அறிவிக்கவிருந்த முயற்சிக்குத் தமிழக ஆளுநர் ரவி முட்டுக் கட்டை போட்டுள்ளாரென தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னாள் தி.மு.க. தலைவரும் முன்னாள் முதல்வருமான கரு ணாநிதி 2006-2011இல் ஆட்சி யிலிருந்தபோது தமிழ் வரு டப்பிறப்பு சித்திரை முதல் திகதி என்பதை... தமிழறிஞர்களின் கூற்றை ஏற்று மாற்றி தை 1 தமிழ் வருட பிறப்பாக அறிவித்தார். அதன் பிறகு ஆட்சிக்கு வந்த ஜெயலலிதா, கருணாநிதி போட்ட உத்தரவை மாற்றி தமிழ் வருடப்பிறப்பு சித்திரை 1தான் தமிழ் வருடப்பிறப்பு என்று அறிவித்துவிட்டார்.

தந்தை கருணாநிதி கனவைச் செயல்படுத்தும் வகையில், புதியதாகப் பொறுப்பேற்றுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின், கடந்த டிசெம்பர் 17ஆம் திகதி, மூத்த அமைச்சர் துரைமுருகனை அழைத்து, தை முதல் திகதி



யைப் புத்தாண்டாக அறிவிக்க ஒப்புதல் கோரும் மனு ஒன்றை அவரிடம் கொடுத்து அன்று மாலை கவர்னரை சந்திக்கச் சொன்னார் முதல்வர்.

அதன்படி அமைச்சர் துரை முருகன், ஆளுநர் மாளிகைக்கு சென்று ஆளுநர் ஆர்.என். ரவியை சந்தித்து முதல்வர் கொடுத்த மனுவைக் கொடுத்துப் பேசினார். அதன் பின பொங்கலுக்குத் தமிழக மக்களுக்கு கொடுக்கப்போகும் பரிசு பொருட்களை வழங்கும் பையில் தை1 தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துகள் என்றும் அச்சடிக்கப்பட்டது. ஆனால், முதல்வர் கொடுத்து அனுப்பிய கடிதத்தின் மீது கவர்னர் ஆர்.என்.ரவி ஆர்வம் காட்டாமல் கிடப்பில் போட்டுள்ளாரென தெரிவிக்கப் பட்டுள்ளது. முதல்வர் பொங்கல் பரிசு வழங்கும்போது தை 1 தமிழ் புத்தாண்டாக அறிவிப்பாரா என்றும், ஜனவரி 5 ஆம் திகதி சட்டமன்றத்தின் ஆளுநர் உரை யில் தமிழ் புத்தாண்டு தை என்ற அறிவிப்பு இடம்பெறுமா என் றும் எதிர்பார்ப்பு தற்போது நிலவி வருகிறது.

# அ.ம.மு.க. நிர்வாகிகள் இராஜினாமா: தினகரன் வீட்டுக்கே படையெடுப்பு!

சென்னை, டிசெ. 27

அ.ம.மு.க. பொறுப்பாளர்கள் பலர் டி.டி.வி. தினகரன் வீட்டுக்கே சென்று இராஜினாமா கடிதத்தைக் கொடுத்துள்ளனர். தனது உதவியாளரை அனுப்பி வைத்து அனைவரின் இராஜினாமா கடிதத்தைப் பெற்றுள்ளார் தினகரன்.

டி.டி.வி. தினகரன், அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் கட்சியைத் தொடங்கி சுமார் 4 வருடங்கள் கடந்துவிட்ட நிலையில், இன்று வரையில் யாருக்கும் உறுப்பினர் அட்டை வழங்கவில்லை.

கடந்த ஒரு வருடமாகவே அ.ம.மு.கவினர் அதிகமாக மாற்றுக் கட்சியில் சேர்ந்து வருகிறார்கள், ஆனால் தினகரன் அவர்களைத் தடுக்க வும் இல்லை. அதைப் பற்றி கவலையும் படுவதில்லை என்கிறார்கள் அவருடன் நெருக்கமாக இருப்பவர்கள். இந்த நிலையில் நேற்று சென்னை அடையாரில் வசிக்கும் தினகரனின் வீட்டை நோக்கி ஐம்பதுக்கும் மேற்பட்ட அ.ம.மு.கவினர் சென்ற



னர். அவர்கள் அனைவரும் தலைவரைச் சந்தித்து இராஜினாமா கடிதம் கொடுக்கப்போகிறோம் என்று தெரிவித்தனர்.

தினகரனின் உதவியாளர் ஒருவர் கடிதங்களை பெற்றுக் கொண்டார்.

கடிதங்களைக் கொடுத்த பூந்தமல்லி அ.ம.மு.க. பொறுப்பாளர்கள் ஊடகங்களு கருத்து தெரிவித்த போது,

“சசிகலா தினகரன் இவர்கள் இருவருக்காகத்தான் அ.தி.மு.கவிலிருந்து வெளியில் வந்தோம், இப்போது சசிகலாவுக்கும் தினகரனுக்கும் பிரச்னைகள் ஏற்பட்டுவிட்டன, இவர்கள் ஒன்றாக இருந்து அ.தி.மு.கவில் சேரவேண்டும் என்றுதான் நினைத்தோம், ஆனால், இவர்கள் இப்படிச் செய்கிறார்களே. பூந்தமல்லி அ.ம.மு.க. நகரசெயலாளர் கந்தன் சசிகலாவுடன் நெருக்கமாக இருந்துவந்தார். அண்மையில் மழை வெள்ள பாதிப்புகளைப் பார்வையிட சசிகலா பூந்தமல்லிக்கு வந்த போது கந்தன் தான் எல்லா ஏற்பாடுகளையும் செய்திருந்தார். இந்த நிலையில் டிசெம்பர் 24ஆம் திகதி எம்.ஜி.ஆர். நினைவு தினத்துக்கு சென்னைக்கு வந்து அஞ்சலி செலுத்திவிட்டு திரும்பும்போதே கந்தனை கட்சியில் இருந்து நீக்கி அறிவிப்பு வெளியிட்டார் தினகரன். இதற்கு எதிர்ப்பு தெரிவித்துதான் பூந்தமல்லி நகர பொறுப்பாளர்கள் அத்தனை பேரும் இராஜினாமா கடிதங்களோடு டி.டி.வி. தினகரனின் வீட்டுக்குச் சென்றோம்“ என்றார்கள்.

# தே.மு.தி.க. செயல் தலைவர் பதவிக்கு விரைவில் பிரேமலதா நியமனம்?

சென்னை, டிசெ. 27

தே.மு.தி.கவில் புதிய செயல் தலைவர் பதவி ஏற்படுத்துவது குறித்து கட்சித் தலைவர் விஜயகாந்த் அறிவிப்பார் என்று அக்கட்சியின் பொருளாளர் பிரேமலதா தெரிவித்தார்.

சென்னையில் உள்ள புனிததோமையார் மலை தேவாலயத்தில் தே.மு.தி.க சார்பில் நேற்று முன்தினம் கிறிஸ்துமஸ் விழா கொண்டாடப்பட்டது. இதில் தே.மு.தி.க. பொருளாளர் பிரேமலதா பங்கேற்று, சிறப்பு பிரார்த்தனை செய்தார்.

பிறகு, ஏழை மக்களுக்கு இனிப்புகள், உணவு வழங்கினார். பின்னர், செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: தே.மு.தி.கவில் செயல் தலைவர் பொறுப்பை ஏற்படுத்த வேண்டும் என்றும், நான் அப்பதவியை ஏற்க வலியுறுத்தியும் சமீபத்தில் நடந்த கூட்டத்தில் மாவட்டச் செயலாளர்கள் வலியுறுத்தினர். ஒட்டுமொத்த நிர்வாகிகளின் கருத்தை கேட்டுப் பெற்று, செயல் தலைவர் பொறுப்பை ஏற்படுத்துவது குறித்து செயற்குழு, பொதுக்குழுவில் தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் அதிகாரப்பூர்வ மாக அறிவிப்பார்” என அவர் தெரிவித்தார்.

### ஆழிப்பேரலை 17ஆவது நினைவேந்தல்:

# ஒப்பாரியிட்டு அழுதும், படையிலிட்டும் வடமராட்சி கிழக்கில் உறவுகள் அஞ்சலி!

**வடமராட்சி, டிசெ. 27**

**ஆழிப்பேரலை காவுகொண்ட தமது உறவுகளை ஒப்பாரியிட்டு அழுதும், அவர்களுக்கு படையிலிட்டும் மக்கள் நேற்று 17ஆவது ஆண்டாக நினைவுகூர்ந்தனர்.**

**2004 டிசெம்பர் 26ஆம் நாள் சுனாமி அனர்த்தம் இலங்கையில் 35 ஆயிரம் பேர் உட்பட இந்தியா, இந்தோனேசியா, மலேசியா, மாலைதீவு ஆகிய நாடுகளில் 2 இலட்சத்து 27 ஆயிரத்து 898 பேர் உயிரிழந்தனர். இந்த அனர்த்தத்தின் 17ஆவது ஆண்டு நினைவுதினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.**



யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அதிக உயிர்கள் பலியான வடமராட்சி கிழக்கிலும் நேற்றைய தினம் தமது உறவுகளை மக்கள் நினைவுகூர்ந்தனர். வடமராட்சி கிழக்கில் ஆயிரத்து 38 பேர் உயிரிழந்தனர்.

பிரதான நினைவேந்தல் உடுத்துறை சுனாமி நினைவாலயத்தில் நினைவேந்தல் குழுவின் தலைவர் வே. தவராசா தலைமையில் இடம்பெற்றது.

நினைவுத்தூபிக்கு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் முதல் மாலை அணிவித்தார். இதனைத் தொடர்ந்து பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் அ. சா. அரியகுமார், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம், ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் யாழ். மாவட்ட நிர்வாக பொறுப்பாளர் ஐ.ஶ்ரீரங்கேஸ்வரன், யாழ் மாவட்ட பொது ஜன பெரமுனவின் இணைப்பாளர் றஜீவன், தமிழ் தேசிய மக்கள் முன்னணி பிரமுகர், மருதங்கேணி பிரதேச செயலர் பிரபாகரமூர்த்தி, மருதங்கேணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அபயசிங்க, ஆகியோர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

இதனை தொடர்ந்து நினைவிடத்திற்கு காணியை அன்பளிப்பு செய்த ஓய்வுநிலை உதவி அரசாங்க அதிபர் புத்திரசிங்காமணியின் பாரியார் ஜெகஜோதி பொதுச் சுடர் ஏற்றி வைத்தார். இதனை தொடர்ந்து உடலங்கள் அடக்கம் செய்யப்பட்ட இடங்களில் அவர்களின் உறவினர்கள் தீபம் ஏற்றி மலர் அஞ்சலி செலுத்தியதுடன் அவர்கள் விரும்பி உண்ட உணவுகளை படையலிட்டும், ஒப்பாரி வைத்து அழுதனர். இதனால் அப்பகுதி எங்கும் சோக மயமானது.

இதேபோல் உடுத்துறை பத்தாம் வட்டாரத்தில் சுமார் 50 உடல்கள் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் அ. சா. அரியகுமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மணல்காடு பகுதியில் 72 உடலங்கள் ஒரே இடத்தில் அடக்கம் செய்யப்பட்ட சவக்காலைப்பிட்டியில் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. முன்னதாக மணற்காடு புனித அந்தோனியார் ஆலயத்தில் பங்குத்தந்தை திருப்பலி ஒப்புக்கொடுத்தைத் தொடர்ந்து சுனாமி நினைவாலயத்தில் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து 72 உடலங்கள் அடக்கம் செய்யப்பட்ட சவக்காலைப்பிட்டியில் அவர்களின் உறவினர்கள் உணவுப்பொருட்களை படைத்து பிள்ளைகளின், உறவுகளின், பெற்றோரின் இழப்பைத் தாங்கமுடியாது ஓலமிட்டு கதறி அழுதனர்.

இதேபோல் பருத்தித்துறை புலோலி சூசையப்பர் ஆலயத்தில் உடலங்கள் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. முன்னதாக புலோலி சூசையப்பர் ஆலயத்தில் பருத்தித்துறை கோட்ட பங்குத்தந்தை திருப்பலி ஒப்புக்கொடுத்ததையடுத்து தங்கள் உறவுகளின் சமாதியில் மக்கள் கண்ணீர் விட்டு கதறி அழுது அஞ்சலி செலுத்தினர்.

இதேபோன்று தாளையடி, கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி உள்ளிட்ட இடங்களில் ஆங்காங்கே ஆழிப்பேரலையால் உயிரிழந்த உறவுகளின் நினைவிடங்களிலும் மக்கள் மலர் தூவி தமது உறவுகளுக்காக கண்ணீர்சிந்தி அஞ்சலி செலுத்தினர்.

(ஐ-2)

---

### தமிழர் - முஸ்லிம் இணைந்து வாழவிடின்

# தமிழ் பேசும் மக்கள் இல்லாத நிலை கிழக்கில் 20 வருடங்களில் ஏற்படும்!

### இப்படி எச்சரிக்கிறார் சாணக்கியன் எம். பி.

மட்டக்களப்பு, டிசெ. 27

கிழக்கு மாகாணத்தில் உள்ள முஸ்லிம்களுக்கு தமிழ் மக்களுடன் இணைந்துவாழ விருப்பம் இல்லையென்றால் இன்னும் 20வருடத்தில் கிழக்கு மாகாணத்தில் தமிழ் பேசும் மக்களே இல்லாத நிலையேற்படும் என்று மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

வட, கிழக்கில் நாங்கள் நிரந்தரமான தீர்வொன்றை அடைவதாக இருந்தால் முஸ்லிம் மக்கள் இல்லாமல் எந்தத் தீர்வையும் அடையமுடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் 16ஆவது ஆண்டு நினைவுதினம் நேற்று முன்தினம் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு வாலிபமுன்னணியின் நிகழ்வில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலைக்கு காரணமாக அமைந்தவர்கள் இன்று சுதந்திரமாக நடமாடித் திரிகின்றனர். இந்த நாட்டில் நிதியும் இல்லை, நீதியும் இல்லாத சூழ்நிலையே இன்று உள்ளது. நீதியமைச்சர் இராஜிநாமா செய்யும் நிலையில் இந்த நாடு உள்ளது. இவ்வாறான நிலையில் மாமனிதர் அமரர் ஜோசப் பரராஜசிங்கத்திற்கு இந்த அரசாங்கம் நீதியைத்தரும் என்று எதிர்பார்க்க முடியாது.

தமிழர்கள் மீது இலங்கை அரசாங்கம் முன்னெடுத்த அடக்குமுறை செயல்பாடுகளை இன்று முஸ்லிம் மக்கள் மீது காட்டப்படுகின்றது.1980 காலப் பகுதிக்கு பின்னரும் முன்னரும் தமிழர்கள் மீது எவ்வாறான அடக்குமுறைகளை முன்னெடுத்தார்களோ அதே அடக்குமுறையை இன்று முஸ்லிம்கள் மீது பிரயோகிப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்கின்றனர். அதனைப் பார்த்து நாங்கள் சந்தோசப்படமுடியாது.

இதற்கு நாங்கள் நீதிகோராவிட்டால் இன்று நாங்கள் ஜோசப் ஐயாவின் மரணத்திற்கு நீதிகோருவதற்கு தகுதியில்லாதவர்களாக மாறிவிடுவோம். நாங்கள் எங்களுக்கு நடந்த அநீதிகளுக்கு நீதிகோரும்போது இன்று நடக்கும் அநீதிகளுக்கும் நாங்கள் நீதிகோரவேண்டும். அதனை எங்களது கட்சியின் ஒரு நிலைப்பாடாக எடுக்கவேண்டும். இன்று முஸ்லிம்களுக்கு அநீதிகள் நடக்கும்போது அதனை ஆதரிக்கின்றனர்.

வடக்கு, கிழக்கில் நாங்கள் நிரந்தர தீர்வொன்றை அடைவதாகயிருந்தால் அதில் இஸ்லாமிய மக்கள் இல்லாமல் தீர்வு ஒன்றும் இல்லை. வட, கிழக்கில் தமிழர்களுக்கு மட்டும் ஒர் அரசியல் தீர்வு கிடைக்கும் என்று நினைத்தால் அது ஒருபோதும் நடக்காது. அதனை நாங்கள் அனைவரும் உணரவேண்டும்.

கிழக்கில் நாங்கள்தான் பெரும்பான்மை சமூகம், நாங்கள் எதற்கு தமிழ் மக்களுடன் இணைந்து வாழவேண்டும் என்று முஸ்லிம்கள் சிலர் கூறுகின்றார்கள். அவர்களுக்கு தமிழ் மக்களுடன் இணைந்து வாழ விருப்பம் இல்லையென்றால் இன்னும் 20வருடத்தில் கிழக்கு மாகாணத்தில் தமிழ் பேசும் மக்களே இல்லாத நிலையேற்படும். அதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன - என்றார். (ஐ)

---

### அதிகாரிகள் அசண்டையீனம்;

# வீதியில் வெட்டப்பட்ட குழியில் விழுந்து இளைஞர் படுகாயம்!

வவுனியா, டிசெ. 27

வவுனியாவில் இடம்பெற்று வரும் வீதி அபிவிருத்தி பணிகளில் வீதி சமிக்ஞைகள் இல்லாததால் வீதியில் வெட்டப்பட்ட குழியில் விழுந்து இளைஞரொருவர் படுகாயமடைந்தார்.

வவுனியா பெரியதம்பனை - பண்டிவிரிச்சான் வீதி புனரமைப்பு பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. இந்நிலையில் குறித்த வீதியில் பாலங்கள் அமைப்பதற்காக வீதியில் கிடங்குகள் வெட்டப்பட்டுள்ள நிலையில் அவை தொடர்பில் பயணிகளுக்கு தெளிவூட்டும் சமிக்ஞைகள் காட்சிப்படுத்தப்படவில்லை.

இதனால், அந்த வீதியால் பயணிப்போர் பல சிரமங்களுக்கு முகம்கொடுத்து வரும் நிலையில் நேற்றுமுன்தினம் இரவு பாலத்துக்காக வெட்டப்பட்ட கிடங்கில் வீழ்ந்து இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்.

இதேவேளை வீதி அபிவிருத்தி பணிகளில் ஈடுபடும் பல இடங்களிலும் இவ்வாறு சமிக்ஞைகள் காட்சிப்படத்தப்படாது உள்ளமை தொடர்பிலும் மக்களால் வீதி அபிவிருத்தி அதிகார சபையினருக்கு தெரிவித்தும் எவ்வித பலனும் கிடைக்கவில்லை எனவும் தெரிவித்தனர். (ஐ)

---

# மன்னாரில் ஒருவர் வெட்டிப் படுகொலை!

மன்னார், டிசெ. 27

மன்னார்- தலைமன்னார் பிரதான வீதி, ஓலைத்தொடுவாய் பகுதியில் வெட்டுக்காயங்களுடன் நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியம் குடும்பஸ்தர் ஒருவர் சடலம் மீட்கப்பட்டது.

சடலமாக மீட்கப்பட்டவர் மன்னார் - புதுக்குடியிருப்பு பகுதியை சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான அப்துல் ரசாக் முஹமது ஹவ்ஸ் (வயது-51) என தெரிய வருகின்றது.

சம்பவ இடத்திற்கு வந்த மன்னார் பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர். சடலத்தில் பலத்த வெட்டுக் காயங்கள் காணப்படுகின்றன என்று தெரிய வருகின்றது.

இதேவேளை இந்த சம்பவத்துடன் தொடர்புடைய இரு சந்தேகநபர்கள் மன்னார் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தனர் என்று கூறப்படுகின்றது. (ஐ)

# தேங்கியுள்ள கொள்கலன்கள் இவ்வாரத்தில் விடுவிக்கப்படும்!

## அமைச்சர் பந்துல அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 27

**டொலர் நெருக்கடி காரணமாக துறைமுகத்தில் தேங்கியுள்ள அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய கொள்கலன்கள் இவ்வாரம் முதல் விடுவிக்கப்படும் என வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.**



வர்த்தகத்துறை அமைச்சில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

டொலர் நெருக்கடி காரணமாக துறைமுகத்தில் தேங்கியுள்ள அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய சுமார் ஆயிரம் கொள்கலன்கள் இவ்வாரம் முதல் விடுவிக்கப்படும். டொலர் நெருக்கடியால் அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதி சேவையில் பெரும் சவால் நிலை தற்போது தோற்றம் பெற்றுள்ளன.

எனவே, தேசிய உற்பத்திகளின் வீதம் அதிகரிக்கப்பட்டால் மாத்திரமே அத்தியாவசிய பொருட்களின் விலை குறைவடையும். தற்போதைய நிலையில் அத்தியாவசிய பொருட்களின் விலை குறைவடையும் என கருத முடியாது.

அத்தியாவசிய பொருட்களின் விலையை குறைக்காவிடினும் அதிகரிக்காமல் இருப்பதற்கு அரசாங்கம் அதிக கவனம் செலுத்தியுள்ளது என்றும் அவர் கூறினார். (ஐ)

# இரசாயன உர இறக்குமதிக்கு 10 நிறுவனங்களுக்கு அனுமதி

கொழும்பு, டிசெ. 27

இரசாயன உரங்களை இறக்குமதி செய்வதற்கு 10 நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒரு நிறுவனத்துக்கு 1,500 தொன் யூரியா உரத்தை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தேசிய உர செயலகத்தின் பணிப்பாளர் சந்தன லொக்குஹேவகே தெரிவித்துள்ளார்.

பயிர்ச்செய்கைகளுக்கு தேவையான இரசாயன உரம் தற்போதைய நிலையில் கிடைக்கப்பெற்று வருகின்றது. மரக்கறி, பழங்கள் மற்றும் அலங்கார மலர் செய்கை என்பவற்றுக்குத் தேவையான இரசாயன உரத்தில் 2,000 தொன் உரம் தற்போதைய நிலையில் இறக்குமதி செய்யப்பட்டுள்ள தாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (கே)

# தனிமைப்படுத்தல் விதிமீறல் 2,188 பேருக்கு எச்சரிக்கை!

கொழும்பு, டிசெ. 27

மேல் மாகாணத்தில் தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிய 2 ஆயிரத்து 188 பேர் கடுமையாக எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்தில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறுவோரை கண்காணிக்கும் நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதற்கமைவாக நேற்று முன்தினம் தினம் 734 பொலிஸார் இணைந்து, சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதன்போது 3,018 மோட்டார் சைக்கிள்களும் 3,072 முச்சக்கர வண்டிகளும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் 6,751 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய 2,188 பேர் கடுமையாக எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர். (கே)

# எரிவாயு அடுப்பு வெடித்து பரவிய தீயால் வீடு நாசம்!

புத்தளம், டிசெ. 27

புத்தளம் - கற்பிட்டி குறிஞ்சிப்பிட்டி, குரக்கான்சேனை பிரதேசத்தில், வீடொன்றில் நேற்று அதிகாலை, சமையல் எரிவாயு அடுப்பு வெடித்ததில், வீடும், வீட்டுடன் இருந்த சிறிய வர்த்தக நிலையமொன்றும் முற்றாக எரிந்து நாசமானது.

மூன்று பிள்ளைகளுடன் தனிமையில் வசித்து வரும் பெண்ணொருவர், நேற்று அதிகாலை தனது பேரப்பிள்ளைக்கு தேநீர் தயாரிப்பதற்காக அடுப்பைப் பற்ற வைத்துள்ளார்.

இதன்போது, எரிவாயு அடுப்பு பெரும் சத்தத்துடன் வெடித்துச் சிதறியதால், வீடும் தீப்பற்றியது. இதைத் தொடர்ந்து நித்திரையிலிருந்த தனது மூன்று பிள்ளைகளையும் தனது மருமகளையும், பேரப்பிள்ளையையும் வீட்டுக்கு வெளியே அழைத்து வந்த குறித்த பெண், வீடு முழுவதும் பரவிக்கொண்டிருந்த தீயை அணைப்பதற்கு அயலவர்களின் உதவியை நாடினார்.

எனினும், இலகுவாக தீ பரவக்கூடிய வீடு என்பதால் விரைவாக தீப்பற்றி வீடு முற்றாக எரிந்து நாசமானது. இந்த விபத்தில் இருவருக்கு சிறிய தீக்காயங்கள் ஏற்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (கே)



# ஆழிப்பேரலை நினைவேந்தல் அலரிமாளிகையில் அனுஷ்டிப்பு!

கொழும்பு, டிசெ. 27

17 வருடங்களுக்கு முன்னர் சுனாமி அனர்த்தத்தில் உயிரிழந்த இலங்கையர்களையும் ஏனையோரையும் நினைவுகூரும் நிகழ்வு நேற்றுக் காலை அலரிமாளிகையில் இடம்பெற்றது.

இதன்போது பிரதமர் காலை 9.25 மணி முதல் 9.27 மணி வரையான இரண்டு நிமிடம் உயிரிழந்தவர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தியதுடன், இறந்தவர்களை நினைவு கூரும் வகையில் தீபம் ஏற்றினார்.

இந்த நிகழ்வில் பிரதமரின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷ, இராணுவ மற்றும் பொலிஸ் உட்பட படைத் தரப்பினரும் கலந்து கொண்டனர்.

சுனாமியால் நாட்டில் 14 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டன. 31 ஆயிரத்து 229 பேர் உயிரிழந்தனர் மற்றும் 4,100 பேர் காணாமல் போனார்கள்.

பேரழிவு 5 இலட்சத்து 16 ஆயிரத்து150 மக்களை இடம்பெயர செய்தது மற்றும் சுமார் இரண்டரை இலட்சம் வீடுகள் மற்றும் சொத்துக்களை அழித்தது.

சுனாமி அனர்த்தம் உட்பட பல்வேறு அனர்த்தங்களில் உயிரிழந்தவர்களை நினைவு கூரும் வகையில் நேற்று "தேசிய பாதுகாப்பு தினம்" அனுஷ்டிக்கப்பட்டது. (ஐ)

# சுனாமியில் சிக்கிய ரயில் உறவுகளை சுமந்து பயணம்!

கொழும்பு, டிசெ. 27

ஆழிப்பேரலையின் 17ஆவது ஆண்டு நினைவு தினமான நேற்று சுனாமியில் சிக்கி 1700 உயிர்களை பலி கொடுத்த ரயில் உயிரிழந்தவர்களின் உறவுகளை ஏற்றியவாறு நேற்று பயணித்தது.

2004 டிசெம்பர் 26ஆம் நாளன்று காலை 6.55 மணிக்கு கொழும்பு - கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து மாத்தறை நோக்கிப் பயணித்த ரயில், தெல்வத்தை - பேரெலிய பிரதேசத்தில், சுனாமி அலையில் சிக்கியது. இதில் பயணித்த சுமார் 1,700 பேர் உயிரிழந்தனர்.

சுனாமியால் சேதமடைந்த குறித்த ரயிலின் என்ஜின், புகையிரதத் திணைக்களத்தால் புனரமைக்கப்பட்டுள்ளது. 591இன் இன்ஜினே இவ்வாறு புனரமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் குறித்த என்ஜின் பொருத்தப்பட்ட விசேட ரயில், ஒவ்வொரு முறையும் சுனாமி தினத்தன்று கோட்டை ரயில் நிலையத்திலிருந்து தெல்வத்தை- சுனாமி நினைவுத் தூபி வரை பயணிக்கின்றது.



இந்நிலையில் சுனாமி தினமான நேற்று, கொழும்பு மருதானையிலிருந்து வந்த குறித்த ரயில், புகையிரத பொது முகாமையாளர் தம்மிக ஜயசுந்தர மற்றும் புகையிரதத் திணைக்களத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் குழுவினரின் பங்கேற்புடன், காலை 06:50 மணிக்கு கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து புறப்பட்டது.

இதன்போது கருத்துரைத்த ரயில் நிலைய அதிகாரி, 17 வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்ட சுனாமி ஆழிப்பேரலையில் அள்ளுண்டு செல்லப்பட்ட ரயிலில் பயணித்த எமது உறவுகளை நினைவு கூருகின்றோம். ஆழிப் பேரலை ஏற்பட்டதன் பின்னர், ரயில் சேவை ஊழியர்கள் இணைந்து ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட புகையிரத மார்க்கத்தை 57 நாட்களில் புனரமைத்தனர். அதனையும் நினைவுக்கூருகின்றோம். ஆழிப்பேரலையில் அள்ளுண்டு சென்ற ரயில் என் ஜின் பொருத்தப்பட்ட ரயிலினூடாக நாம் தெல்வத்த நோக்கி பயணித்தோம் - என்றார்.

ரயில் பயணித்த நிலையில் ஆழிப்பேரலையில் சிக்கிய உறவுகளை நினைவுகூருமாக அவர்களது உறவினர்கள், நண்பர்கள், கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து குறித்த ரயிலில் தெல்வத்த நோக்கி பயணித்தமை குறிப்பிடத்தக்கது. (கே)

# வியாபார நிலையம் தீப்பற்றி எரிந்து நாசம்!

கொழும்பு, டிசெ. 27

கொழும்பு, மஹரகமவில் வியாபார நிலையமொன்று தீப்பற்றி எரிந்தது. இதில் அந்த வியாபார நிலையம் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

தெஹிவளை நகர சபையின் தீயணைப்புப் பிரிவினர், பொலிஸார் பிரதேச மக்கள் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. பொலிஸார் மேலதிக விசாரணைகளை தொடர்ந்து வருகின்றனர். (கே)

# ஆழிப்பேரலை அழிவின் 17ஆவது நினைவேந்தல் பதிவுகள்


யாழ்ப்பாணம் கச்சேரியில்...








வடமராட்சி உடுத்துறையில்...




வடமராட்சி மணல்காட்டில்...








முல்லைத்தீவில்...




மட்டக்களப்பில்...






நுவரெலியாவில்...


மன்னாரில்...


வவுனியாவில்...

படங்கள் - வடமராட்சி, யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, முல்லைத்தீவு நிருபர்கள்

இஸ்ரத் ஹுசைன்



**பங்களாதேஷின் வளர்ச்சிக் கதை மிகவும் சுவாரஸ்யமானது. புயல், வெள்ளம், பஞ்சம் ஆகிய இயற்கைப் பேரிடர்களுக்கு அடிக்கடி ஆளாகக்கூடிய ஒரு நாடு எப்படி இவ்வளவு சாதனைகளைப் படைக்க முடிந்திருக்கிறது. அதுவும் பக்கத்து நாடுகளான இந்தியா, பாகிஸ்தானைவிட சமூக - பொருளாதார அம்சங்களில்?**

# பங்களாதேஷ் ஐம்பதாண்டு சாதனை எப்படி? எதனால்?

பங்களாதேஷ் என்ற நாடு உருவாகி ஐம்பதாண்டுகள் ஆனது கொண்டாடப்படுகிறது. “இந்த நாடு பொருளாதார, நிதி நிர்வாக ரீதியாக நீண்ட காலம் நிலைத்திருக்காது” என்று அமெரிக்காவின் அப்போதைய வெளியுறவு அமைச்சரும், அறிஞர்களில் ஒருவராகவும் கருதப்பட்ட ஹென்றி கிஸ்ஸிங்கர் கூறியிருந்தார். அவருடைய கணிப்பு பொய்த்துவிட்டது.

இப்போது வளரும் நாடுகளுக்கு பங்களாதேஷ் முன்மாதிரி நாடாக இருக்கிறது. அதன் தேசிய வருமானம் ஐம்பது மடங்காக உயர்ந்திருக்கிறது. தனிநபர் வருமானம் இருபத்தைந்து மடங்கு உயர்ந்துவிட்டது. இந்தியா, பாகிஸ்தானைவிட அதிகம். உணவு தானிய உற்பத்தி நான்கு மடங்காக உயர்ந்திருக்கிறது. மக்கள்தொகைப் பெருக்கம் 2.5 மடங்குக்கு மேல் போகாமல் கட்டுப்படுத்தப்பட்டு விட்டது. தனிநபர உணவு தானிய வழங்கல் அதிகரித்துள்ளது. ஏற்றுமதி 100 மடங்கு பெருகியிருக்கிறது. 1990 இல் நாட்டு மக்களில் 60% பேர் ஏழைகளாக இருந்தனர். இப்போது அந்த எண்ணிக்கை 20% ஆகக் குறைந்துவிட்டது. சராசரி ஆயுள் காலம் 72 வயதாக உயர்ந்திருக்கிறது. பல்வேறு சமூகநலக் குறியீடுகள் பக்கத்து நாடுகளைவிட அதிகம். சிலவற்றில் இலங்கை விதிவிலக்கு. மனிதவள குறியீட்டெண் 60%.

இந்தச் சாதனைகளில் பெரும்பாலானவை கடந்த முப்பது ஆண்டுகளில் எட்டப்பட்டவை. முதல் இருபது ஆண்டுகளில் அரசியல் கொந்தளிப்பும் சோகையான பொருளாதார வளர்ச்சியுமே மிகுந்திருந்தன. வங்கதேசத்தின் வளர்ச்சியை உணர வேண்டும் என்றால் இன்னொரு கோணத்தில் பார்க்க வேண்டும். 1990 இல் பாகிஸ்தானின் நபர்வாரி வருமானம் பங்களாதேஷில் இருந்ததைவிட இரண்டு மடங்கு. இப்போதோ பங்களாதேஷ் நபர்வாரி வருவாயில் ஏழில் ஒரு பங்காக சரிந்துவிட்டது. கோவிட் பெருந்தொற்றுக்கு முன்பாக, 2011 முதல் 2019 வரையில் வங்கதேசத்தின் ஜிடிபி 7 முதல் 8 சதவீதமாக இருந்தது. பாகிஸ்தானின் வளர்ச்சியைவிட கிட்டத்தட்ட இரண்டு மடங்கு.

பங்களாதேஷின் வளர்ச்சிக் கதை மிகவும் சுவாரஸ்யமானது. புயல், வெள் ளம், பஞ்சம் ஆகிய இயற்கைப் பேரிடர்களுக்கு அடிக்கடி ஆளாகக்கூடிய ஒரு நாடு எப்படி இவ்வளவு சாதனைகளைப் படைக்க முடிந்திருக்கிறது. அதுவும் பக்கத்து நாடுகளான இந்தியா, பாகிஸ் தானைவிட சமூக - பொருளாதார அம்சங்களில்?

**எப்படி இந்தச் சாதனை?**

பங்களாதேஷ் மிகவும் கடுமையான சூழ்நிலைகளைக் கடந்துதான் இந்த உன்னத நிலைக்கு வந்திருக்கிறது. விடுதலைக்குப் பிறகு, வங்காளிகளை மட்டுமே கொண்ட புதிய நிர்வாகம் ஏற்படுத்தப்பட்டது. பாகிஸ்தான் இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்ந்த இலட்சக்கணக்கான மக்களை மீள் குடியமர்வு செய்ய வேண்டிய பெரிய கடமை அரசுக்கு இருந்தது. நாடு சுதந்திரம் அடைந்த சில மாதங் களுக்குள்ளாகவே அதன் நம்பிக்கைக்குரிய தலைவர் ஷேக் முஜிபுர் ரஹ்மான் படுகொலை செய்யப்பட்டார். ஆட்சியைக் கைப்பற்ற இராணுவம் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண் டது. சில வேளைகளில் வெற்றியும் பல சமயங்களில் தோல்வியும் அதற்குக் கிடைத்தது. 1991 வரையில் இராணு வம்தான் பெரும்பாலும் ஆட்சி நடத்தி யது. ஜெனரல் எர்ஷாத் 1991இல் நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கு வழி விட்டார். 2007இல் இராணுவம் தலைமையில் இடைக்கால அரசு பதவியேற்று இரண்டு ஆண்டுகளுக்கு ஆட்சிசெய்தது.

ஷேக் ஹசீனாவின் (முஜிபுர் ரஹ்மானின் மகள்) அவாமி லீக் கட்சியும், காலிதா ஜியா தலைமையிலான வங் கதேச தேசியக் கட்சியும் (பி.என்.பி.) 1991 முதல் மாறி மாறி ஆட்சி செய்கின்றன. 2009 முதல் தொடர்ந்து மூன்று முறை யாக அவாமி லீக் வெற்றி பெற்று ஆள் கிறது. இரண்டு பேகம்களுக்கும் இடை யிலான அரசியல் சண்டை தீவிரமானது, கசப்பானது. காலிதா ஜியா கடந்த பொதுத் தேர்தலைப் புறக்கணித்துவிட்டு சிறையிலேயே இருந்தார். அரசியல் இப்படியிருந்தாலும் இந்த நாட்டின் வளர்ச்சி மட்டும் எப்படி தொய்வில்லாமல் வளர்கிறது என்பது வியப்புக்கும் ஆய்வுக்கும் உரியது. வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்கு வங்கதேசம் ஏதோ அரசியல் நிலைத்தன்மை இல்லாத நாடுபோலத்தான் தோற்றமளித்தது. இதற்கான காரணங்களைப் பார்ப்போம்.

**ஆறு காரணங்கள்**

முதலாவதாக, இந்தியா - பாகிஸ்தான் போல அல்லாமல் பங்களாதேஷ் முழுக்க கலாச்சார ரீதியாக ஒரே இனம், அதாவது ஒரே மொழி பேசும் மக்களைக் கொண்டது. இந்நாட்டின் குடிமக்கள் அனைவருக்குமே ஒரே வரலாற்றுப் பின்னணிதான். எனவே மதம், பிராந்தியம், பழங்குடி - சமவெளி, நிலப்பிர புக்கள் - குடிவாரதாரர்கள் என்ற வேறு பாடுகள் கரைந்துவிட்டன. கிராமப்புற - நகர்ப்புற வேறுபாடுகள் இருந்தாலும் வளர்ச்சி காரணமாக நகர்ப்புற வசதிகள் கிராமங்களுக்கும் கிட்ட ஆரம்பித்து விட்டதால் வேற்றுமை குறைந்துவருகிறது.

இரண்டாவதாக, பங்களாதேஷ் முழுக்க ஒற்றை ஆட்சிதான். மாநிலங்களோ மாகாணங்களோ கிடையாது. எனவே மத்திய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டிலேயே அரசு நிர்வாகம், அரசியல் நிர்வாகம், சட்ட நிர்வாகம், நிதி நிர்வாகம் அனைத்தும் மேற்கொள்ளப்படுகிறது. பல அடுக்கு அரசுகளுக்குள் ஏற்படக்கூடிய உரசல்களுக்கு வங்க தேசத்தில் வாய்ப்பே இல்லை. அரசின் கொள்கையும் அதை நடைமுறைப் படுத்துவதும் அதிகாரப் படிநிலையில் நன்கு ஒருங்கிணைந்து நிறைவேற்றப் படுகிறது. ஆட்சி மாறினாலும் ஆளும் தலைமை மிக வலுவானதாகவும் எதிர்க்கட்சி மிகவும் வலிமை குன்றியதாகவுமே அமைகிறது. இதனால் வெற்றி பெறும் கட்சி இடும் கட்டளையை ஏற்று நடப்பதைத் தவிர அதிகார வர்க்கத்துக்கு வேறு வழி இருப்பதில்லை.

மூன்றாவது, வங்கதேசப் பெண்கள் எழுத்தறிவு பெற்றவர்களாகவும் விழிப்புணர்வுள்ளவர்களாகவும் இருக்கின்றனர். மகளிர் கல்வி, குடும்பக் கட்டுப்பாடு, சுகாதாரமான வாழ்க்கை முறை ஆகியவற்றை அரசு பிரச்சாரம் செய்யும்போது வரவேற்று ஏற்றனர். சிறு கடன் திட்டங்களின் மூலம் பெண்கள் கடன் பெற்று பலன் பெற்றனர். மகளிர் சுய உதவிக் குழுக்கள் இணக்கமாகச் செயல்பட்டு பொருளாதாரச் சுதந்திரம் பெற்றன. குடும்பங்களின் வருமானம் பெருகியது. பெண்கள் குடும்பங்களை வழிநடத்துபவர்களாக மாறினார்கள். தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், கிராமீன் திட்டம், பிராக், ஆசா போன்றவை மகளிர் முன்னேற்றத்துக்குப் பல வழிகளிலும் உதவுகின்றன.

அரசாங்கம் அனைத்தையும் தானே செய்ய முடியாது என்பதை உணர்ந்து, தன்னார்வத் தொண்டு நிறுவனங்களைப் பயன்படுத்திக்கொண்டது. கல்வி, சுகாதார விழிப்புணர்வு பெற்ற பெண்கள் போதிய இடைவெளியில் இரண்டு குழந்தைகளைப் பெற்று அவற்றின் கல்வி, உடல் நலனுக்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தனர். பெண்கள் வேலை செய்வது அதிகமாக இருப்பதால் தொழிலாளர்களிடையே பாலின சதவீத வேறுபாடு குறைவு. ஆரம்பக் கல்வியில் எல்லா பெண் குழந்தைகளும் கட்டாயம் இடம் பெறுகின்றனர்.

நான்காவதாக, இரண்டு பெரிய கட்சிகளுக்கும் இடையில் கடுமையான அரசியல் வேறுபாடு இருந்தாலும் ஆட்சிக்கு வருகிறவர்கள் முந்தைய அரசின் கொள்கைகளையும் திட்டங்களையும் தொய்வில்லாமல் நிறைவேற்றுகின்றனர். பேரியல் பொருளாதார நிர்வாகத்தில் நிலைத்தன்மை, நிதியைக் கையாள்வதில் சிக்கனம், வர்த்தக நடவடிக்கைகளில் வெளிப்படைத் தன்மை, தனியார் துறைக்கு ஊக்குவிப்புச் சலுகைகள், சமூக வளர்ச்சியில் அக்கறை ஆகியவற்றில் எந்த ஆட்சியும் குறை வைப்பதில்லை. ஆட்சி மாறினாலும் வளர்ச்சிகள் பாதிக்கப்படுவதில்லை. இதனால் முதலீட்டாளர்களும் சந்தையும் கவலையற்று வேலையைத் தொடர முடிகிறது. இதனால் அனைவருக்கும் பொருளாதாரப் பலன் தொடர்ந்து கிடைக்கிறது.

ஐந்தாவதாக, தொழில்-வர்த்தக கட்டுப்பாடுகளைத் தளர்த்துவது, பொருளாதாரத்தை அன்னிய முதலீடுகளுக்குத் திறந்துவிடுவது, அன்னியத் தொழில்நுட்பத்தை வரவேற்பது, ஏற்றுமதியாளர்களுக்கு ரொக்க ஊக்குவிப்புகளையும் ஏனைய வரிச்சலுகை உள்ளிட்ட ஊக்குவிப்புகளையும் அளிப்பதில் தாராளம் காட்டப்படுகிறது. ஆயத்த ஆடை தயாரிப்பு, ஏற்றுமதியில் சீனத்துக்கு அடுத்த இடத்தை வங்கதேசம் பிடித்திருக்கிறது. உலகின் தலைசிறந்த ஆயத்த ஆடை பிராண்டு நிறுவனங்கள் தயாரிப்புப் பணிகளை அயல்பணி ஒப்படைப்பு அடிப்படையில் வங்கதேசத்துக்கே அதிகம் தருகின்றன. இந்தத் துறையில் பெண்களுக்குக் கிடைத்துள்ள அபரிமிதமான வேலைவாய்ப்பால் அவர்களுடைய குடும்பங்கள் பொருளாதாரத்தில் தற்சார்பையும் வளத்தையும் எட்டியுள்ளன. இளம் தலைமுறையினர் தொழில் முனைவோர்களாக வளர்கின்றனர். எனவே உயர் கல்வியிலும் திறன்களை வளர்ப்பதிலும் ஆர்வம் அதிகமாகி வருகிறது.

ஆறாவதாக, தொடர் உயர் வளர்ச்சிக்கு உள்நாட்டு சேமிப்புகளும் முதலீடுகளும் 15 சதவீதத்திலிருந்து 30 சத வீதமாக அதிகரித்தது முக்கிய காரணம். உற்பத்திக்குத் தேவைப்படும் முதலீடு தனியார் மூலம் கிடைப்பதால் அரசு தனது வருவாயை அடிப்படைக் கட்டமைப்புகளுக்கு அதிகம் செலவிட முடிகிறது. விரைவுபடுத்தப்பட்ட வளர்ச்சியின் பலன் அரசு, தனியார் துறை என்று அனைவருக்கும் கிடைக்கிறது. ஒட்டு மொத்தமாக அதிகரித்து வரும் கேட்பு (டிமாண்ட்), அதிக இறக்குமதிக்கு வித்திட்டாலும், அதற்கான பணம் ஏற்றுமதி மூலம் பெறப்படுகிறது. எனவே நடப்புக் கணக்குப் பற்றாக்குறை கட்டுக்குள்ளேயே இருக்கிறது.

தொழிலதிபர்கள், மேட்டுக்குடிகளுக்கு மட்டுமே பலன் தரும் திட்டங்களாகப் பார்த்து ஊக்குவிக்காமல் ஒட்டு மொத்த சமூக முன்னேற்றத்துக்குமான வளர்ச்சிக்கு அரசு ஆதரவு அளிக்கிறது. தேர்தல் பிரச்சாரம் அனைத்துமே கட்சிகளின் சாதனை அடிப்படையில்தான் நடக்கிறதே தவிர, தனிமனிதர்களின் புகழ், ஆற்றல் ஆகியவற்றை முன்னிலைப்படுத்தி நடப்பதில்லை. அரசு, ஆட்சியாளர்கள், தனியார் துறையினருக்கு இடையிலான கூட்டு, நாட்டுக்கு நன்மை பயப்பதாகவே இருக்கிறது.

அரசியல் தலைவர்கள் தொழில் நிறுவனங்களிடம் தேர்தல் செலவுக்கு நன்கொடை பெறுகின்றனர். அதிகாரிகள் ஊதியம் குறைவு என்பதால் வேலையைச் செய்துவிட்டு வியாபாரிகள், தொழிலதிபர்களிடம் அன்பளிப்பு பெறுகின்றனர். தொழிலதிபர்கள் சுற்றுச்சூழலைப் பற்றிக் கவலைப்படாமலும் தொழிலாளர்களை ஓரளவுக்கு சுரண்டியும்தான் லாபம் சம்பாதிக்கின்றனர். ஆனால் இவர்களில் எவருமே தாங்கள் சம்பாதிப்பதை வெளிநாடுகளில் பதுக்குவதோ முதலீடு செய்வதோ இல்லை. எல்லாப் பணமும் வங்கதேசத்துக்குள்ளேயே செலவாகிறது. இதுவும் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுகிறது.

வரிக்கும் ஜிடிபிக்குமான விகிதம் 8 அல்லது 9 சதவீதமாகத்தான் இருக்கிறது. இதன் உள்ளடக்கம் என்னவென்றால் பெருக்கல் விளைவால் (மல்டிபிளையர் எஃபக்ட்) பொருளாதாரம் வளர்வதற்கு வாய்ப்புகளை அரசு ஏற்படுத்தித் தருகிறது. அரசுத் துறையில் செலவிடப்படும் டாலரைவிட, தனியார் துறைக்குக் கிடைக்கும் டாலர் வெகு விரைவாக லாபத்தைக் கொண்டுவருகிறது. அரசின் செலவைவிட வருவாய் குறைவுதான் என்றாலும் இந்த பற்றாக்குறை எப்போதும் 5 சதவீத அளவுக்கே பராமரிக்கப்படுகிறது. அரசின் பொதுக் கடன் சுமையும் மிக மிகக் குறைவு. பேரியியல் பொருளாதாரம் ஸ்திரமாக தொடர்கிறது.

ஆக, கொள்கையில் தொடர்ச்சி, ஏற்றுமதிக்கு ஊக்குவிப்பு, மனித ஆற்றலில் தொடர் முதலீடு, அரசுத்துறையும் தனியார் துறையும் இணைந்து செயல்படும் முறை ஆகியவற்றால் பங்களாதேஷ் வெற்றிகளைக் குவிக்கிறது! - The Dawn ■

ஈழநாடு



# சீன சிநேகத்தின் சிக்கல்கள்

கலாநிதி அமீரலி

**கடந்த பல மாதங்களாக ராஜபக்ஷ அரசின் வெளிநாட்டு உறவுகளிலே சில முக்கியமான திருப்பங்கள் ஏற்பட்டுள்ளமையை அரசியல் அவதானிகள் உணரத் தவறமாட்டார். இந்தத் திருப்பங்களின் பின்னணி என்ன?**

வேட்டி தரித்து, திறந்த நெஞ்சுடன் கற்பூரமும் மலர்களும் ஏந்தி, நல்லூர் கந்தனை வழிபட்டு, கோயில் அர்ச்சகரிடமிருந்து பிரசாதமும் வாங்கியபின் தமிழ் தலைவர்களுடன் கைகோர்த்த சீனக் குழு வடக்கிலே வெளிப்படுத்தியது சீன அரசின் தமிழருடனான ஆத்மார்த்த உறவையா சீன இராஜதந்திரத்தின் சந்தர்ப்ப சகவாசத்தையா? எந்த ஒரு நாடும் இன்னொரு நாட்டுக்கோ இனத்துக்கோ கருணை காட்டுவதன் அடிப்படை நோக்கு அயல்நாட்டுடனோ அயல் இனத்துடனோ கொண்டுள்ள இரக்கமல்ல, அந்த இரக்கத்தால் சொந்த நாட்டுக்குக் கிடைக்கவிருக்கும் நன்மைகளே. இது இராஜதந்திர சாணக்கியத்தின் ஒரு தாரக மந்திரம் என்பதை உலக வரலாறு உணர்த்தும். சோழியன் குடும்பி சும்மா ஆடாதென்று சும்மாவா அன்று சொன்னார்கள்? இதில் படிக்க வேண்டிய அரசியற் பாடங்கள் நிறைய உண்டு.

தமிழ் இளைஞர்களின் தமிழீழப் போராட்டத்தை முறியடிப்பதற்காக அன்றைய ராஜபக்ஷ ஆட்சிக்கு ஆயுதங்களையும் பணத்தையும் வாரி இறைத்த சீனம், கடந்த வருடம் ஐ. நாவின் மனித உரிமைச் சபையிலே இலங்கையின் சிறுபான்மையினருக்கு அதன் அரசினால் இழைக்கப்படும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட பிரேரணையை நிராகரித்து ராஜபக்ஷ அரசுக்குச் சார்பாக வாக்களித்த சீனம், இப்போது சடுதியாக மனம்மாறி தமிழருடன் உறவு கொண்டாடத் தொடங்கியமை ஆச்சரியமாக இல்லையா? இந்த நாடகத்தின் அந்தரங்கம்தான் என்னவோ?

கடந்த பல மாதங்களாக ராஜபக்ஷ அரசின் வெளிநாட்டு உறவுகளிலே சில முக்கியமான திருப்பங்கள் ஏற்பட்டுள்ளமையை அரசியல் அவதானிகள் உணரத் தவறமாட்டார். இந்தத் திருப்பங்களின் பின்னணி என்ன?

போர் முடிந்ததன் பின்னர் அண்டை நாடான இந்தியாவையும் அமெரிக்காவையும் அதன் மேற்கு நேச நாடுகளையும் புறந்தள்ளிவிட்டு சீனாவுடனான உறவை ராஜபக்ஷ அரசு பலப்படுத்திக் கொண்டதை உலகே அறியும். அந்தப் பலத்தின் வெளித்தோற்றமே சீனாவின் அம்பாந்தோட்டை துறைமுகம். அது மட்டுமல்ல, கொழும்புத் துறைமுகத்தின் கிழக்குக் கொள்கலன் பராமரிப்பை இந்தியாவுக்கும் ஜப்பானுக்கும் வழங்குவதாக உறுதியளித்து அதற்கான ஒப்பந்தத்திலும் கைச்சாத்திட்டபின் ஒரு தலைப்பட்சமாக அந்த ஒப்பந்தத்தை கிழித்தெறிந்துவிட்டு சீனாவுக்கு அந்தப் பராமரிப்பை வழங்கியமை அந்த உறவின் இன்னுமொரு வெளிப்பாடு. அதேபோன்று அமெரிக்காவின் மில்லெனியம் சலஞ் நிறுவனத்தின் முதலீட்டை முற்றாக ராஜபக்ஷ அரசு நிராகரித்தமை இலங்கை அமெரிக்காவுக்கு இழைத்த ஓர் அவமானமில்லையா? எல்லாவற்றுக்கும் மேலாக கொழும்புத் துறைமுக நகரைத் தன் செலவிலேயே கட்டி எழுப்பிய சீனாவுக்கே அதன் அதிகபட்ச நிர்வாகத்தையும் அவசர அவசரமாக நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஒரு மசோதாமூலம் கையளித்தமை எந்த அளவுக்கு சீனவலைக்குள் இலங்கை சிக்கியுள்ளது என்பதை உலகுக்குக் காட்டவில்லையா?

ஏவ்வாறாயினும் இலங்கை இறைமையுள்ள ஒரு சுதந்திர நாடு. அதன் வெளிநாட்டுக் கொள்கையில் மற்றவர்கள் நேரடியாகத் தலையிட முடியாது. ஆனாலும் இலங்கையின் சீன உறவால் மூக்குடைபட்ட இந்தியா வளர்ந்து வரும் ஒரு பிராந்தியப் பொருளாதாரப் பூதம். அதேபோன்று அமெரிக்காவும் சீனாவுடன் ஒப்பிடும்போது அதன் பொருளாதாரம் நலிவடைந்துள்ள போதிலும் அமெரிக்கா இன்னும் ஓர் உலக வல்லரசு என்பதை யாரும் மறுப்பதில்லை. இவை இரண்டினதும் நேசநாடுகளுள் ஐரோப்பிய ஒன்றியமும் அடங்கும். அந்த ஒன்றியமே இலங்கையின் சிறுதர மத்தியதர கைத்தொழில் உற்பத்திகளின் ஏற்றுமதிக்கான பாரிய சந்தை. அந்தச் சந்தை இலங்கைக்கென பிரத்தியேகமான சில இறக்குமதிச் சலுகைகளை வழங்கியுள்ளது. அந்தச் சலுகைகளை ஐரோப்பிய ஒன்றியம் நிறுத்துமானால் இலங்கையின் பல தொழிற்சாலைகள் மூடப்படுவது நிச்சயம். முன்னரும் ஒரு முறை அவ்வாறு நடைபெற்றதுண்டு. எனவே இலங்கையின் சீனசார் வெளிநாட்டுக் கொள்கைக்குப் பாடம் கற்பிக்க இந்த ஒரு பொருளாதாரத் தொடர்பே போதுமானது.

இத்தனைக்கும் மத்தியில் இன்னும் ஒரு சக்தி இலங்கைக்குத் தலையிடியாக அமைந்துள்ளது. அதுதான் மேற்கு நாடுகளிலே புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர். அவர்களுள் மிகப்பெரும்பான்மையினர் தமிழர்கள். அவர்களுடன் ஒரு புலம்பெயர் இலங்கை முஸ்லிம் சமூகமும் அண்மைக் காலத்தில் வளரத் தொடங்கியுள்ளது. ஒரு பக்கத்தில் புலம்பெயர் தமிழர் மேற்குலக அரசுகளுக்கு இலங்கைக்கெதிரான அழுத்தங்களைக் கொடுக்க புலம்பெயர் முஸ்லிம்கள் அரபு நாடுகளுக்கு அவ்வாறான அழுத்தங்களைக் கொடுக்கின்றனர். ஐரோப்பிய ஒன்றியத்தின் 2021 இறக்குமதிச் சலுகை நிறுத்தப் பயமுறுத்தலுக்கும், உலக முஸ்லிம் ஒற்றுமை நிறுவனத்தின் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட அதே ஆண்டுப் பிரேரணைக்கும், ஐ. நா. மனித உரிமைகள் சபையின் 2020 பிரேரணைக்கும் பின்னணியாக புலம்பெயர் இலங்கையரின் அழுத்தங்களும் இயங்கின என்பதை மறுக்க முடியாது.

எனவே ஏற்கனவே அரசாங்கத்தின் கண்மூடித்தனமான பொருளாதாரக் கொள்கைகளால் பாதிக்கப்பட்டு நெருக்கடிகளுக்குள்ளான இலங்கை உலக அழுத்தங்களின் நிமித்தம் மேலும் அதிகமான நெருக்கடிகளை அனுபவிக்கும் ஆபத்தை எதிர்நோக்கியது.



ஜனாதிபதியும் பிரதமரும் வெளிநாட்டு அமைச்சரும் அவர்களது பரிவாரங்களும் அமெரிக்காவுக்கும் ஐரோப்பாவுக்கும் அரபு நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் பறந்து திரிந்ததன் பின்னணியும் இதுதான். இவற்றின் ஒட்டுமொத்தமான விளைவே வெளிநாட்டுறவில் ஏற்பட்ட மாற்றங்கள். இந்தியாவுடனும் அமெரிக்காவுடனுமுள்ள உறவை சீர்படுத்தாவிடில் பேராபத்துகளை எதிர்நோக்கவேண்டி வரும் என்பதை உணர்ந்த ராஜபக்ஷ அரசு இந்தியாவின் அதானி நிறுவனத்துக்கு கொழும்புத் துறைமுகத்தின் மேற்கு நிறுவனத்துடன் அவசர அவசரமாகவும் இரகசியமாகவும் செய்துகொண்ட ஒப்பந்தத்துடனும் இலங்கையின் வெளிநாட்டு உறவில் மாற்றம் ஏற்படத் தொடங்கியது. இதை சீனா நிச்சயம் வரவேற்கவில்லை என்பதை வடக்கின் மூன்று தீவுகளில் சீனா மேற்கொள்ள இருந்த மின்னுற்பத்தித் திட்டத்தை இந்தியாவின் எதிர்ப்பினால் கைவிட்டமை உறுதிப்படுத்திற்று.

இந்த மாற்றங்களுக்குப் பதிலிறுக்கும் முகமாகவே தமிழினத்தின்மேல் சீனாவுக்குக் காதல் மலர்ந்துள்ளது. இந்தக் காதலால் ராஜபக்ஷ ஆட்சிக்கு சீனம் சொல்லும் செய்தியென்ன? "தமிழினத்தின் பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படவில்லை. அவை ஐ. நாவின் கவனத்தை ஈர்த்துள்ளன. அங்கே இலங்கைக்கெதிரான பிரேரணைகள் வரும்போது சீனா அரசுக்குச் சார்பாக வாதாடும் என்பது நிச்சயமில்லை", என்று கூறுவதுபோல் இல்லையா? அது தான் இந்த நாடகத்தின் அந்தரங்கமாயின் தமிழர்கள் இந்தக் காதலை ஆதரிப்பதில் தவறில்லை. அத்துடன் இன்று அரசுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே ஏற்பட்டுள்ள முறுகலின் மத்தியில் சீனா இலங்கை முஸ்லிம்களையும் ஆரத்தழுவினால் அதிலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால், இந்தக்காதலின் இன்னொரு பக்கத்தையும் நோக்குதல் வேண்டும்.

இந்தக் காதலுக்கு ராஜபக்ஷ அரசின் இரகசிய ஆதரவும் இருந்திருக்கலாமென எண்ணவும் இடமுண்டு. அதற்குக்காரணம் சர்வதேச மட்டத்தில் தமிழர்களின் கோரிக்கைகளையும் அதற்காக அழுத்தம் கொடுக்கும் புலம்பெயர் தமிழர் இயக்கங்களையும் கொச்சைப்படுத்தி அவையெல்லாம் சீனாவின் ஆதரவில் இயங்குகின்றன என்றவொரு பிரச்சாரத்தையும் முடுக்கிவிடலாமல்லவா? ஒரே கல்லில் இரண்டு மாங்காய். இந்தக் கோணத்தில் நோக்குகையில் சீனர்கள் இவ்வாறான காதலை முஸ்லிம்களுடனும் வளர்ப்பார்களாயின் அதுவும் அரசுக்கு சாதகமாகிவிடும். எனவே பிச்சை போட்ட காசையும் நல்ல காசா செல்லாக் காசா என்று பார்த்துப் பெறவேண்டும் என்பதுபோல சீனத்துச் சினேகத்தின் சிக்கல்களை உணர்ந்து செயற்படுதல் சிறுபான்மையினருக்குச் சாலவும் சிறந்தது. ■

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வி னாத்தான்

நேரம் : 1 மணித்தியாலம்

21. ◇ ★ = 8 உம்

◇ ◇ ★ = 10 உம் ஆகும் எனின்,

◇ ★ ★ ★ ★ = .................. என்பதில் வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

(1) 18 (2) 26 (3) 30

22. நான் 28 ரூபாயைக் கொடுத்து 1 மாம்பழத்தையும் 2 கொய்யாப்பழங்களையும் வாங்கினேன். மாம்பழம் ஒன்றின் விலை கொய்யாப்பழம் ஒன்றின் விலையைப் பார்க்கிலும் 10 ரூபாய் அதிகமாகும். கொய்யாப்பழம் ஒன்றின் விலை யாது?

(1) 5 ரூபாய் (2) 6 ரூபாய் (3) 7 ரூபாய்

23. விபரத்தை வாசித்து வினாவுக்கு விடை தருக.

இது மூன்று எழுத்துக்களைக் கொண்ட ஒரு சொல்லாகும்.
முதல் எழுத்து கதையில் உண்டு சதையில் இல்லை.
இரண்டாம் எழுத்து மரத்தில் உண்டு மனத்தில் இல்லை.
மூன்றாம் எழுத்து கம்பியில் உண்டு கப்பியில் இல்லை.

அச்சொல் எது?

(1) கத்தி (2) கனம் (3) கரம்

24. இன்னும் இரண்டு வருடங்களில் ஜீவாவின் வயது பாமாவின் வயதின் இரு மடங்காக இருக்கும். தற்போது பாமாவின் வயது 6 வருடங்கள் எனின், ஜீவாவின் தற்போதைய வயது எத்தனை வருடங்கள் ஆகும்?

(1) 12 (2) 14 (3) 16


25. ஜுலை மாதத்தில் 8 ஆம் நாள் திங்கட்கிழமையாகும். அம்மாதத்தில் உள்ள புதன்கிழமைகளின் எண்ணிக்கை யாது?


(1) 3 (2) 4 (3) 5

26. பெரிய வட்டம் ஒன்றினுள் நான்கு சிறிய வட்டங்களும் ஒவ்வொரு சிறிய வட்டத்தினுள்ளும் அதிலும் சிறிய நான்கு வட்டங்களும் வரையப்பட்டிருந்தன. வட்டங்களின் மொத்த எண்ணிக்கை யாது?


(1) 5 (2) 20 (3) 21

27. வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.





28. தரப்பட்டுள்ள மூன்று உருக்களில் ஓர் உரு மற்றைய இரு உருக்களிலிருந்தும் வேறுபட்டது, அவ்வேறுபட்ட உருவைத் தெரிவு செய்க.




29. இந்த உருவைப் பூரணப்படுத்துவதற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.




30. பின்வரும் திண்ம உருக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள விளிம்புகளின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லும் ஒழுங்கில் அத்திண்ம உருக்கள் வரிசைப்படுத்தப்பட்டுள்ள விடையைத் தெரிவுசெய்க.




(1) ACDB
(2) CADB
(3) CDAB

31. குடும்பம் ஒன்றில் தந்தையும் தாயும் இருப்பதுடன் அவர்களுக்கு மூன்று மகன்மாரும் அவர்களின் மனைவிமாரும் உள்ளனர்.

ஒவ்வொரு மகன்மாருக்கும் இரண்டு மகன்களும் ஒரு மகளும் என்றவாறு உள்ளனர். அக்குடும்பத்தில் உள்ள ஆண் உறுப்பினர்களின் எண்ணிக்கை பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கையை விட எவ்வளவால் கூடியதாகும்?

(1) 2 (2) 3 (3) 4

### விடைகள்

22. (2) 23. (3) 24. (2) 25. (3) 26. (3) 27. (3)
29. (2) 30. (2) 31. (2)

# பொருளாதார வீழ்ச்சிக்கு ராஜபக்ஷ அரசே பொறுப்பு

## ஐ.தே.க. பதிலடி

கொழும்பு, டிசெ. 27

**“நாட்டின் தற்போதைய பொருளாதார வீழ்ச்சிக்கு ஆட்சியிலுள்ள ராஜபக்ஷ அரசே பொறுப்புக்கூற வேண்டும்.”**

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு கடந்த அரசே பிரதான காரணம் என அரசு தெரிவித்துவரும் குற்றச்சாட்டு தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நாட்டின் பொருளாதாரம் பாரியளவில் வீழ்ச்சியடைந்திருக்கின்றது. இதிலிருந்து மீள்வதற்கு அரசிடம் எந்தத் திட்டமும் இல்லை.

எனினும், வீழ்ச்சியடைந்து செல்லும் நாட்டைக் கட்டியெழுப்ப நாட்டின் பழைமையான, அனுபவமுள்ள கட்சி என்ற வகையில் 15 வருடங்களுக்கு மாற்ற முடியாத கொள்கைத் திட்டம் ஒன்றை அமைத்து வருகின்றோம். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டலின் அடிப்படையிலேயே இது அமைக்கப்படுகின்றது.

நாட்டின் தற்போதைய பொருளாதார வீழ்ச்சிக்கு ஐக்கிய தேசியக் கட்சி உட்பட ஆட்சி செய்த அனைத்து அரசுகளும் பொறுப்புக்கூற வேண்டும் என அரசு தெரிவித்து வருகின்றது. இந்த நிலைமைக்கு நாங்கள் பொறுப்புக்கூற வேண்டியதில்லை.

2015இல் இருந்து 2019 வரை எமது அரசில் பொருளாதாரத்தை சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்து, எந்தப் பொருட்களுக்கும் தட்டுப்பாடு இல்லாமல் பாதுகாத்து வந்தோம். அதற்கான வேலைத்திட்டங்களை நாங்கள் அமைத்திருந்தோம். அதனால்தான் எம்மால் அரச ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் சம்பள அதிகரிப்பை மேற்கொண்டு, எரிபொருள், எரிவாயு உட்பட அத்தியாவசியப் பொருட்களைத் தட்டுப்பாடு இல்லாமல் குறைந்த விலைக்குக் கொடுக்க முடியுமாகியது.

ஆனால், இந்த அரசு ஆட்சிக்கு வந்ததுடன் எமது திட்டங்கள் அனைத்தையும் இல்லாமல் செய்து, அரசுடன் இருக்கும் வியாபாரிகளுக்குத் தேவையான மாதிரி பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்ய ஆரம்பித்தது. அதன் பெறுபேறே தற்போதைய பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணமாகும். அதனால் நாட்டின் தற்போதைய பொருளாதார வீழ்ச்சிக்கு ஆட்சியிலுள்ள ராஜபக்ஷ அரசே பொறுப்புக்கூற வேண்டும்” - என்றார். (இ)



## கிணற்றில் விழுந்து பெண் உயிரிழப்பு!

கண்டி, டிசெ. 27

பெண்ணொருவர் கிணற்றில் விழுந்து மரணமடைந்தார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கண்டி, கட்டுகஸ்தோட்டை பொலிஸ் பிரிவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கட்டுகஸ்தோட்டை பிரதேசத்தைச் சேர்ந் 65 வயது பெண்ணே இவ்வாறு மரணமடைந்தார்.

பிரேத பரிசோதனைக்காக கண்டி வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கட்டுகஸ்தோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## ரயில் நிலைய அதிபர்களின் போராட்டம் பிற்போடப்பட்டது

கொழும்பு, டிசெ. 27

ரயில் நிலைய அதிபர்களின் தொழில்சங்கப் போராட்டம் பிற்போடப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் நேற்று நள்ளிரவு முதல் அனைத்து விதமான செயற்பாடுகளிலிருந்தும் விலகி, தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுக்கப்போவதாக ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் முன்னர் அறிவித்திருந்தது.

எனினும், மேற்படி தொழில்சங்க நடவடிக்கை இன்று காலை 10 மணிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது என மேற்படி சங்கம் அறிவித்துள்ளது.

ரயில் அதிகார சபையுடன் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ள கலந்துரையாடலின் பின்னர் இறுதி அறிவிப்பு வெளியாகும் எனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது. (இ)

## ஜனாதிபதி செயலாளர் பதவியை துறக்கும் ஜயசுந்தரவுக்கு நிதி அமைச்சில் உயர் பதவி

கொழும்பு, டிசெ. 27

ஜனாதிபதி செயலாளர் பிபீ ஜயசுந்தர, 2022 பெப்ரவரி முதலாம் திகதி முதல் நிதி அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகராகச் செயல்படவுள்ளார் என அறிய முடிகின்றது.

ஜனாதிபதி செயலாளராக பதவி வகிக்கும் பி.பீ. ஜயசுந்தரவைப் பதவி விலகுமாறு ஆளுங் கட்சியில் உள்ள உறுப்பினர்கள் சிலர் வலியுறுத்தியுள்ளனர்.



இதனால் பதவி விலகுவதற்குத் தீர்மானித்துள்ள அவர், இதற்கான கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ளார்.

குறித்த கடிதத்தை ஜனாதிபதி ஏற்று, புதிய செயலாளரை நியமிக்கும்வரை பி.பீ. ஜயசுந்தர பதவியில் நீடிப்பார்.

அதன்பின்னர் அவர் நிதி அமைச்சுக்குச் செல்லவுள்ளார். பிரதமரின் ஆலோசனையின் பிரகாரம் அவருக்கு சிரேஷ்ட ஆலோசகர் பதவி வழங்கப்படவுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாகச் செயற்பட்ட காலத்தில் பி.பீ. ஜயசுந்தர, திறைசேரி செயலாளராகச் செயல்பட்டார். (இ)

## 10 ஆயிரம் வீட்டுத் திட்டம் விரைவில் ஆரம்பம்

### மருதபாண்டி இராமேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு

நுவரெலியா, டிசெ. 27

“மலையகத்துக்கான 10 ஆம் வீட்டுத்திட்டம் வெகுவிரைவில் ஆரம்பிக்கப்படும். கொரோனா நெருக்கடி நிலைமை இருந்தாலும் மலையகத்துக்கான அபிவிருத்திகள் நிறுத்தப்படமாட்டாது.”

- இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நிதிச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி இராமேஸ்வரன் தெரிவித்தார்.

மருதபாண்டி இராமேஸ்வரன் எம்.பியின் 45ஆவது பிறந்தநாளையொட்டி நுவரெலியா பிரதேச சபையின் கேட்போர் கூடத்தில் கார்லபேக் தமிழ் மகா வித்தியாலயத்தின் மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் அவரால் நேற்று வழங்கிவைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் நுவரெலியா பிரதேச சபை தலைவர், உறுப்பினர்கள், பொலிஸார் உட்படப் பலரும் கலந்துகொண்டனர்.

இதில் கலந்துகொண்ட பின்



ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

“மலையக சமூகத்தின் வளர்ச்சி என்பது கல்வியில் தான் தங்கியுள்ளது என்பதை நாம் உறுதியாக நம்புகின்றோம். அதனால்தான் ஐயா சௌமியமூர்த்தி தொண்டமான், தலைவர் ஆறுமுகன் தொண்டமான் காலம் முதல் இன்றுவரை கல்விக்கு நாம் அதிக நிதியை ஒதுக்குகின்றோம். கல்வி சார்ந்த அபிவிருத்தி திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்குகின்றோம். உதவிகளைச் செய்கின்றோம்.

மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராகவும் இன்று அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன. இந்நிலைமை மாறுவதற்கும் கல்வியே எமக்குக் கைகொடுக்கும். எமது பிள்ளைகள் கல்வியில் முன்னேற்றம் கண்டால் நிச்சயம் வீறுநடை போடலாம். அதற்குப் பக்கபலமாக காங்கிரஸ் துணை நிற்கும்.

கொரோனா நெருக்கடி காலத்திலும் நாட்டுக்குத் தேவையான முக்கியமான அபிவிருத்தித் திட்டங்கள் நிறுத்தப்படவில்லை. அதற்கான பணிகளை நிதி அமைச்சர் சிறந்த முறையில் முன்னெடுத்து நிதி ஒதுக்கீடுகளை வழங்கிவருகின்றார். மலையகத்துக்கான 10 ஆயிரம் வீட்டுத் திட்டமும் விரைவில் ஆரம்பிக்கப்படும்.

மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபாய் வழங்குவதில் ஒரு சில தோட்டக்கம்பனிகள் இழுத்தடிப்பு செய்து வருகின்றன. இது தொடர்பில் வழக்கு விசாரணை நிலுவையில் உள்ளது. எனவே, விரைவில் சாதகமான சூழ்நிலை உருவாகும்” - என்றார். (இ)

## ஓட்டோக்களுக்கும் மீற்றர் இயந்திரம் ஜனவரி 15 ஆம் திகதி முதல் கட்டாயம்




கொழும்பு, டிசெ. 27

மேல் மாகாணத்தில் இயங்கும் அனைத்து ஓட்டோக்களுக்கும் எதிர்வரும் ஜனவரி மாதம் 15ஆம் திகதி முதல் மீற்றர் இயந்திரத்தைக் கட்டாயமாக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது குறித்த பிரதேசத்தில் இயங்கும் பெரும்பாலான ஓட்டோக்களில் மீற்றர் இயந்திரம் இல்லை எனவும், சாரதியிடம் கட்டணம் அறவிடப்படுகின்றது எனவும் ஓட்டோ சாரதிகள் சங்கத்தின் தலைவர் லலித் தர்மசேகர தெரிவித்துள்ளார்.

ஜூன் 15ஆம் திகதி முதல் ஏனைய அனைத்து மாகாணங்களிலும் ஓட்டோக்களுக்கு மீற்றர் இயந்திரம் கட்டாயமாக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். அதன்படி அனைத்து ஓட்டோக்களுக்கும் மீற்றர் இயந்திரம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. (இ)



## உலகின் மிகப்பெரிய தொலைநோக்கி வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது!

நியூயோர்க், டிசெ. 27

சுமார் ஆயிரம் கோடி அமெரிக்க டொலர் - நம் நாட்டு மதிப்பில் சுமார் 2 இலட்சத்து 2 ஆயிரத்து 502 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்ட உலகின் மிகப்பெரிய விண்வெளி தொலைநோக்கியான 'ஜேம்ஸ் வெப்' (James Webb) பிரெஞ்சு கயானாவில் இருந்து நேற்றுமுன்தினம் விண்ணுக்கு ஏவப்பட்டதாக நாஸா அறிவித்தது.

பூமியிலிருந்தவாறு விண்ணில் உள்ள பல நட்சத்திரங்களை அறிவதற்கு நவீன தொலைநோக்கிகள் முக்கியமானவையாக இருந்தன. ஆனாலும் காற்று மாசு, வளிமண்டல தூசுகள் காரணமாக பூமியிலிருக்கும் தொலைநோக்கிகள் மூலமாக விண்வெளி நிகழ்வுகளை துல்லியமாகப் பார்க்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக விண்வெளியில் தொலைநோக்கியை நிலைநிறுத்த ஆராய்ச்சியாளர்கள் திட்டமிட்டனர். அதன்படி ஹப்பிள் என்ற தொலைநோக்கி முன்னர் பூமிக்கு வெளியே விண்ணில் நிலைநிறுத்தப்பட்டது. அந்த விண்வெளி தொலைநோக்கி மூலம் இதுவரை அறியப்படாத பல அரிய விண்வெளி தகவல்கள் அறியப்பட்டன.

இந்நிலையில் விண்வெளி ஆய்வுகளை மேலும் மேம்படுத்தும் நோக்குடன் சுமார் ஆயிரம் கோடி டொலர் செலவில் இதுவரை பூமியில் தயாரிக்கப்பட்ட தொலைநோக்கிகளில் மிகவும் பெரியதான 'ஜேம்ஸ் வெப்'பை உருவாக்கினார்கள்.

இதை உருவாக்குவதற்கு பல ஆண்டுகள் எடுத்த நிலையில், பலவிதமான சோதனைகளுக்குப் பின்னர் பிரெஞ்சு - கயானாவில் உள்ள ஏவூர்தி (rocket) ஏவுதளத்தில் இருந்து ஏரியன் 5 ஏவூர்தி மூலம் இந்த தொலைநோக்கி வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.

இந்த விண்வெளி தொலைநோக்கி நிலவில் இருந்து மூன்று மடங்கு தொலைவுக்கு சென்று, சூரியனை சுற்றியவாறு தனது ஆய்வுப் பணியை மேற்கொள்ளும். பிரபஞ்சத்தின் முதல் நட்சத்திரத்தை கண்டுபிடிக்கும் சக்தி கொண்ட இந்த தொலைநோக்கி மனித குலம் முன்பு அறியாத பல அரிய தகவல்களை அடுத்த சில ஆண்டுகளில் அளிக்கும் என விண்வெளி ஆய்வாளர்கள் நம்பிக்கை வெளியிட்டனர். (ஐ)

## தற்கொலை தாக்குதலில் கொங்கோவில் 5 பேர் பலி!

பிராஸ்பெல்லே, டிசெ. 27

கொங்கோ ஜனநாயகக் குடியரசின் கிழக்கு நகரமான பெனியில் உணவகம் ஒன்றில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட தற்கொலை குண்டுத் தாக்குதலில் குறைந்தது 5 பேர் கொல்லப்பட்டனர். அத்துடன், 13 பேர் காயமடைந்தனர் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தற்கொலை குண்டுதாரி உணவகக் கட்டத்துக்குள் நுழைய முயன்றபோது பொலிஸார் அவரை இனங்கண்டு தடுத்தனர். இதனால் உணவகத்தின் நுழைவாயிலிலேயே குண்டு வெடிக்கச் செய்யப்பட்டது. இதில், தற்கொலை குண்டுதாரியும் மேலும் ஐவரும் உயிரிழந்தனர்.

ஐ. எஸ். தீவிரவாதிகளுடன் தொடர்புடையதாகக் கூறப்படும் ஒரு தீவிரவாதக் குழுவான ஏ.டி.எப். இந்தத் தாக்குதலை நடத்தி இருக்கலாம் என அதிகாரிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர். எனினும், இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்தக் குழுவும் பொறுப்பேற்கவில்லை.

வெடிகுண்டு வெடித்த போது உணவகத்தில் 30இற்கும் மேற்பட்டோர் கிறிஸ்மஸ் விருந்தை கொண்டாடிக் கொண்டிருந்தனர். அப்போது உணவகத்தில் குழந்தைகள் மற்றும் உள்ளூர் அதிகாரிகளும் இருந்தனர் என்று கூறப்படுகிறது. (ஐ)

# மியன்மார் இராணுவம் வெறியாட்டம்! 30+ பொதுமக்கள் கொன்று குவிப்பு!

## கிறிஸ்மஸ் தினத்தன்று பயங்கரம் இரு மனிதாபிமான பணியாளர் கடத்தல்!



யங்கூன், டிசெ. 27

கிறிஸ்துமஸ் தினமான சனிக்கிழமையன்று மியன்மார் இராணுவத்தினர் கிராம மக்களை சுற்றிவளைத்து 30இற்கும் மேற்பட்டவர்களை சுட்டுக் கொன்றனர். அத்துடன், உயிரிழந்தவர்களின் உடல்களுக்கு தீ வைத்து எரித்துள்ளனர்.

இவ்வாறு பலியானவர்களில் பெரும்பாலானோர் பெண்களும் குழந்தைகள்ஃ சிறுவர்களாவர் என்று கூறப்படுகிறது.

இந்த சம்பவத்தில் ஐக்கிய அரபு இராச்சியத்தை தளமாகக் கொண்ட மனிதாபிமான குழுவின் இரு உறுப்பினர்களும் காணாமல் போயுள்ளனர் என்று ஆதாரங்களை மேற்கொள்காட்டி சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மியன்மாரின் கிழக்கு மோ சோ கிராமத்திலேயே இந்த சம்பவம் நடத்துள்ளது. இந்தத் தாக்குதல் குறித்து சனிக்கிழமை ஓர் அறிக்கையில் உறுதிபடுத்தியுள்ள சேவ் தி சில்ட்ரன் அமைப்பு, மனிதாபிமான பணிகளைச் செய்துவிட்டு வீடு நோக்கி பயணித்த இரண்டு ஊழியர்கள் சம்பவத்தின் பின்னர் காணாமல்போயுள்ளனர் என்று கூறியுள்ளது.

இதேநேரம் அவர்களின் தனிப்பட்ட வாகனம் தாக்கப்பட்டு எரிக்கப்பட்டதையும் அது உறுதிபடுத்தியுள்ளது.

நோபல் பரிசு பெற்ற ஆங் சான் சூகியின் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தை ஏறக்குறைய 11 மாதங்களுக்கு முன்பு இராணுவம் கவிழ்த்ததில் இருந்து மியன்மார் கொந்தளிப்பில் உள்ளது. படையினரின் ஒடுக்குமுறையில் 1,300 க்கும் மேற்பட்ட பொது மக்கள் இதுவரை உயிரிழந்தனர் என்று உள்ளூர் கண்காணிப்புக் குழுக்கள் தெரிவித்துள்ளன. (ஐ)



## கடல் தரையில் நடக்கும் மீன்! ஆஸியில் மீண்டும் கண்டறிவு!

ஹோபார்ட், டிசெ. 27

அவுஸ்திரேலியாவை மட்டுமே பூர்வீகமாகக் கொண்ட ஓர் அரிய வகை நடக்கும் மீன் (Walking handfish) 22 ஆண்டுகளுக்குப் பின்னர் முதன்முறையாக தஸ்மானியா கடலில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இளஞ்சிவப்பு நிறத்திலான ஹாண்ட் பிஷ் என்ற இந்த மீன் வகையை கடைசியாக 1999இல் தஸ்மானியா கடல் பகுதியில் கடலில் முக்குளிக்கும் ஒருவர் பார்த்தார். மேலும், இதுவரை நான்கு முறை மட்டுமே இந்த வகை மீன் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்த வகை மீன் இனத்தை அழிந்து வரும் இனமாக கடல்வாழ் உயிரின ஆய்வாளர்கள் வகைப்படுத்தினர். இந்நிலையில் அண்மையில் இவ்வாறான மீன் இனம் கண்டறியப்பட்டது மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இளஞ்சிவப்பு ஹாண்ட் பிஷ் தொடர்ந்து உயிர் வாழும் என்ற நம்பிக்கையை இது வழங்குகிறது. ஏனெனில், அவை முன்பு நினைத்துக் கொண்டிருந்த கடல்பரப்பை விட பரந்த வாழ்விடத்தை கொண்டு பரவியிருக்கின்றன என ஆய்வுகளில் தெரியவந்துள்ளதாக தஸ்மானியா பல்கலைக்கழகத்தின் இணை பேராசிரியரும் கடல் உயிரியலாளருமான நெவில் பார்ரெட் கூறினார்.

இந்த மீன்கள் பெரிய கைகளைப் போன்ற செட்டைகளைக் கொண்டுள்ளன. அதைப் பயன்படுத்தி நீந்துவதோடு, கடல் தரையில் நடக்கவும் அவற்றால் முடிகிறது என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

## மண்டேலாவின் சிறை சாவி ஏலம் தென்னாபிரிக்க அரசு எதிர்ப்பு!

ஜொகன்னஸ்பேர்க், டிசெ. 27

ஷதென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் சிறை சாவியை தனியார் நிறுவனம் ஒன்று ஏலம்விடுவதை தடுத்து நிறுத்த அந்த நாட்டு அரசு தீவிர முயற்சி எடுத்துள்ளது.

தென்னாபிரிக்காவின் கறுப்பின முதல் ஜனாதிபதியாக இருந்தவர் நெல்சன் மண்டேலா. நிறவெறி அரசாங்கத்துக்கு எதிராகப் போராடிய அவருக்கு 27 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இதில், 18 ஆண்டுகள், ராபன் தீவில் உள்ள சிறையில் அவர் அடைக்கப்பட்டார். அங்கு சிறைக் காவலராக இருந்தவர் கிறிஸ்டோ பிராண்ட். இவர் மண்டேலாவின் சிறை அறையை பூட்ட பயன்படுத்திய சாவியை அமெரிக்காவை சேர்ந்த, 'குர்ன்சி அக்ஷன்ஸ்' என்ற ஏலம் விடும் நிறுவனத்திற்கு வழங்கி உள்ளார். அந்த சாவியை ஏலம் விட முடிவு செய்துள்ள அந்த நிறுவனம், வரும் ஜனவரின் 28ஆம் திகதி அதற்கான ஏலம் விடப்படும் என்றும் அறிவித்துள்ளது.

இந்நிலையில் அந்த ஏலத்தை தடுத்து நிறுத்த தென்னாபிரிக்க அரசு முடிவு செய்துள்ளது. "நெல்சன் மண்டேலாவின் வாழ்க்கையில் ஓர் அங்கமாக இருந்த அந்த சாவியை ஏலத்தில் விட முடிவு செய்யப்பட்டுள்ளது வேதனை அளிக்கிறது. அதுவும், தென்னாபிரிக்க அரசிடம் இதுகுறித்து தெரிவிக்கவும் இல்லை. அந்த சாவி, தென் ஆப்ரிக்க மக்களுக்கு சொந்தமான ஒன்று. அது தனிப்பட்ட நபர் யாருக்கும் சொந்தமானது அல்ல. அதை உரிமைக் கொண்டாட யாருக்கும் உரிமை இல்லை. அதை மீட்க தேவையான அனைத்தையும் எடுப்போம்", என்று அந்த நாட்டின் சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஐ)






ஜாம்பவான்களின் கிரிக்கெட்;

# ஆசியா லயன்ஸ் அணியில் ஆறு இலங்கை வீரர்கள்!

கொழும்பு, டிசெ. 27

ஓய்வுபெற்ற சர்வதேச கிரிக்கெட் வீரர்களுக்கான தொழில்முறை கிரிக்கெட் தொடரான ஜாம்பவான் கிரிக்கெட் லீக் அடுத்த வருடம் ஜனவரியில் ஓமானில் அமைந்துள்ள அல் அமெரத் மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

முதல்பதிப்பில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து மற்றும் பிற கிரிக்கெட் நாடுகளைச் சேர்ந்த முன்னாள் வீரர்கள் இந்தியா, ஆசியா லயன்ஸ் மற்றும் உலகின் பிற நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மூன்று அணிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளனர்.

ஆசியா லயன்ஸ் அணியில் சனத் ஜெயசூர்யா, முத்தையா முரளிதரன், சமிந்த வாஸ், ரொமேஷ் களுவிதாரண, திலகரத்ன டில்ஷான், அசார் மஹ்மூத், உபுல் தரங்க, சொஹைப் அக்தர், ஷகீட் அப்ரிடி, மிஸ்பா உல் ஹக், மொஹமட் ஹபீஸ், சொஹைப் மாலிக், மொஹமட் யூசப், உமர் குல், யூனுஸ் கான் மற்றும் அஷ்கர் ஆப்கான் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இந்திய அணியின் முன்னாள் பயிற்றுவிப்பாளர் ரவி சாஸ்திரி இந்திய கிரிக்கெட் அணியில் பதவி வகித்ததைத் தொடர்ந்து கடந்த மாதம் இதன் ஆணையாளராக சேர்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# ஒருநாள் அணியில் மீண்டும் அஸ்வின்!

புதுடில்லி, டிசெ. 27

தென்னாபிரிக்கா அணிக்கு எதிரான 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடருக்கு இந்திய அணிக்கு அஸ்வின் உள்வாங்கப்படவுள்ளார். இதனால், வெள்ளைப்பந்து கிரிக்கெட்டில் அவரின் மறுபிரவேசம் தொடர வாய்ப்புள்ளது.

இருபது - 20 உலகக் கிண்ணத் தொடருக்காக அஸ்வின் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர், 4 ஆண்டுகளாக அஸ்வின் டெஸ்ட் போட்டிகளில் மட்டுமே இந்திய அணிக்காக விளையாடினார்.

அஸ்வின் கடைசியாக 2017 ஜூலை மாதம் ஒருநாள் போட்டியில் விளையாடியிருந்தார். எனினும், கடந்த உலகக் கிண்ணப் போட்டியிலும், ராஞ்சியில் நடந்த நியூசிலாந்து அணிக்கு எதிரான இரு ருவென்ரி - 20 போட்டியிலும் அஸ்வின் போட்டி தேர்வாளர்களை ஈர்த்திருந்தார்.

தென்னாபிரிக்க - இந்திய அணிகள் மோதும் ஒருநாள் போட்டி எதிர்வரும் ஜனவரி 19, 21, 23ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இங்கிலாந்தை 185 ஓட்டங்களுக்கு சுருட்டியது அவுஸ்திரேலிய அணி!

மெல்பர்ன், டிசெ. 27

பட் கம்மின்ஸ், நதன் லியோனின் அபார பந்துவீச்சுக்கு தாக்குப் பிடிக்க முடியாமல் இங்கிலாந்து அணி 185 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்துள்ளது.

இங்கிலாந்து - அவுஸ்திரேலிய அணிகள் மோதும் 5 டெஸ்ட் போட்டிகள் கொண்ட ஆஷஷ் தொடரின் மூன்றாவது போட்டி நேற்று ஆரம்பமானது. முதலிரு டெஸ்ட் போட்டிகளிலும் வெற்றி பெற்று முன்னிலையிலுள்ள நிலையில் நேற்று இரு அணிகளும் மெல்பர்னில் களம் கண்டன.

நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

இதனால், முதலில் துடுப்பெடுத்தாடியது இங்கிலாந்து அணி. ஹசீப் ஹமீட் 0, ஷாக் கிரவே 12 ஓட்டங்கள் என ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களை கம்மின்ஸ் வீழ்த்தினார்.

அடுத்துவந் டேவிட் மலனும் 14 ஓட்டங்களுடன் கம்மின்ஸின் பந்தில் வோர்ணரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தனர். இந்த விக்கெட் வீழ்த்தப்பட்ட பின்னரே இங்கிலாந்து வீரர்கள் துடுப்பாட்டத்தில் நிதானம் காட்டினர்.

அரைச்சதத்தைத் தொட்ட ஜோ ரூட் 50 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, பின்னர் வந்த பென் ஸ்ரோக்ஸ் 25, பெயரஸ்ரோ 35 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தனர். பின்னர் வந்த வீரர்கள் லியோனின் பந்தில் ஆட்டமிழந்தனர்.

இதனால், 65. 1 ஓவர்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்து, 185 ஓட்டங்களைப் பெற்றது.

அவுஸ்திரேலியாவின் பந்து வீச்சில் பட் கம்மின்ஸ், நதன் லியோன் ஆகியோர் தலா 3 விக்கெட்களையும், மிற்செல் ஸ்ரார்க் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தனது இனிங்ஸை ஆரம்பித்த அவுஸ்திரேலிய அணி



நேற்று முதல் ஆட்டம் முடிவுக்கு வந்தபோது 16 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மட்டும் இழந்து 61 ஓட்டங்களை எடுத்திருந்தது.

தொடக்க வீரர்களுள் ஒருவரான டேவிட் வோர்ணர் 38 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

மற்றோர் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான மார்கஸ் ஹரிஸ் 20 ஓட்டங்களுடனும், நதன் லியோன் ஓட்டம் எதுவும் எடுக்காத நிலையிலும் ஆட்டமிழக்காமல் உள்ளனர். இங்கிலாந்தின் ஜேமஸ் அண் டர்சன் ஒரு விக்கெட்டை சாய்த தார்.

இன்று போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டமாகும். (ஐ)

# பங்களாதேஷ் அணியுடன் இணைந்தார் ரங்கன ஹேரத்!

டாக்கா, டிசெ. 27

பங்களாதேஷ் அணியின் சுழல் பந்து வீச்சு பயிற்றுவிப்பாளர் ரங்கன ஹேரத் மீண்டும் அணியினருடன் இணைந்துள்ளார். கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டிருந்த அவர் 14 நாட்கள் தனிமைப் படுத்தலை முடித்துக் கொண்டு அணியினருடன் இணைந்துள்ளார்.

பங்களாதேஷ் - நியூசிலாந்து இடையே இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில் அவர் அணியினருடன் சேருவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் முன்னாள் பந்துவீச்சாளரான ரங்கன ஹேரத் தற்போது பங்களாதேஷ் அணியின் சுழல்பந்து வீச்சு ஆலோசகராகப் பணியாற்றி வருகின்றார். இவருக்கு அண்மையில் கொரோனா தொற்று உறுதிப் படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)





# ஓட்டமின்றிய ஆட்டமிழப்பில் 50ஐ தொட்ட இங்கிலாந்து!

மெல்பர்ன், டிசெ. 27

இங்கிலாந்து துடுப்பாட்ட வீரர்கள் 2021 டெஸ்ட் கிரிக்கெட்டில் இதுவரை 50 முறை ஓட்டம் பெறாமலே ஆட்டமிழப்பு என்ற மோசமான சாதனையைப் பதிவு செய்துள்ளனர்.

அவுஸ்திரேலியா- இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் ஐந்து போட்டிகள் கொண்ட ஆஷஷ் கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், பொக்சிங் டே டெஸ்ட் போட்டி நேற்று ஆரம்பமானது. இதிலும் தோல்வியடைந்தால் இங்கிலாந்து தொடரை இழக்க நேரிடும்.

எனினும், நேற்று தொடங்கிய போட்டியில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான ஹசீப் ஹமீத் ஓட்டம் எதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்தார். இந்த ஆண்டில் டக் அவுட் ஆன 50ஆவது இங்கிலாந்து வீரர் இவராவார். (ஐ)

# மாற்று அரச தலைவராக சஜித்தை ஏற்கும் உலகம்

## ஐக்கிய மக்கள் சக்தி பெருமிதம்

கொழும்பு, டிசெ. 27

**“இந்தியா, சீனா உள்ளிட்ட உலக நாடுகள் இலங்கையில் மாற்று அரசாக ஐக்கிய மக்கள் சக்தியையும், மாற்று அரச தலைவராக சஜித் பிரேமதாஸவையும் ஏற்றுக்கொண்டுள்ளன. அதனால்தான் சீனா சஜித்துக்கு உதவுகின்றது. இந்தியாவும் அவருடன் பேச்சு நடத்துகின்றது.”**

- இவ்வாறு பிரதான எதிர்க் கட்சி அறிவித்துள்ளது.

இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் உப செயலாளர் அசோக அபேசிங்க எம்.பி. ஊடகங்களிடம் மேலும் கூறிய தாவது:-

“இந்த அரசு மீது உலக நாடுகளுக்கு நம்பிக்கை இல்லை. அதனால்தான் கடன் வழங்குவதற்கு நாடுகள் முன்வர மறுக்கின்றன. நிதி தொடர்பான தரவுப் பட்டியல்களில் எமது நாடு தொடர்ச்சியாகப் பின் நிலைப் படுத்தப்படுகின்றது. இது மிகவும் பாரதூரமான நிலைமையாகும். எனினும், உலக நாடுகள் ஐக்கிய மக்கள் சக்தி மீது நம்பிக்கை வைத்து அதனை மாற்று அரசாகவும், அதன் தலைவர் சஜித் பிரேமதாஸவை மாற்று அரச தலைவராகவும் ஏற்று வருகின்றன. அதனால்தான் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் கோரிக்கையை ஏற்று 20 மில்லியன் ரூபாய் நன்கொடையை சீனா வழங்கியது.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச இந் தியா சென்று கடன் கேட்டார். அதனை வழங்க லாமா அல் லது இல்லையா என் பது தொடர்பில் அந் நாட்டு உயர்மட்ட அதிகாரிகள் சஜித்தைத் தொடர்புகொண்டு கேட்கின்றனர். அதாவது உலக நாடுகள் மாற்றுத் தலைவராக சஜித்தை ஏற்றுள்ளன என்பதையே இது வெளிப்படுத்துகின்றது.

இது தெளிவாக புரி கின்றது. சஜித் பிரேமதாஸ மனித



நேயமிக்க தலைவர். அதனால் தான் எதிரணியில் இருக்கும் போதும் மக்களுக்கு உதவு கின்றார். நாட்டை மீட்பதற் கான வேலைத்திட்டம் தயா ரிக்கப் பட்டு வருகின்றது. சகல துறைகளையும் உள்ளடக் கிய தீர்வுத் திட்டம் விரைவில் முன் வைக்கப்படும். அதற்கான ஏற்பாடுகள் தற்போது இடம் பெற்று வருகின்றன” - என்றார். (இ)

# சர்வதேச சமூகம் இனி நேரில் களமிறங்கும்!

## அரசுக்கு கிரியெல்ல எம்.பி. எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 27

“2022 மார்ச்சில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரை ஆட்சியாளர்கள் எவ்வாறு சமாளிப்பார்கள் எனத் தெரியவில்லை. உறுப்புரிமை நாடுகள் இம்முறை இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றிக்கொண்டிருக்கமாட்டார்கள். நடைமுறைக்குச் சாத்தியமான நடவடிக்கையில் அவர்கள் நேரில் களமிறங்குவார்கள்.”

- இவ்வாறு பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட எதிரணியின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. மேலும் கூறியதாவது:-

“சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பின்றி இலங்கை போன்ற நாடுகளால் முன்னோக் கிப் பயணிக்க முடியாது.

உள்நாட்டு போர் முடிவடைந்த பிறகு, அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் நான் முக்கியமானதொரு விடயத்தை சுட்டிக்காட்டிருந்தேன். அதாவது மண்டேலாவின் வழி, முகாபேயின் வழியென இரண்டு வழிகள் உள்ளன. மண்டேலாவின் வழியைத் தெரிவு செய்யுமாறு கோரினேன். ஆனால் முகாபே யின் வழியையே மஹிந்த ராஜபக்ஷ தெரிவுசெய்தார். இதன் விளைவு என்ன? ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் தொடர்ச்சியாக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

2015 மார்ச்சில் இலங்கை மீது பொருளாதாரத் தடை



விதிக்கப்படும் என்ற அச்சத்தாலேயே முன்கூட்டியே ஜனாதிபதித் தேர்தலை நடத்தி அவர் தோல்வியைச் சந்தித்தார்.

தற்போதைய அரசும் இதே வழியில்தான் பயணிக்கின்றது. ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நாட்டுக்குத் தோல்வி ஏற்படுகின்றது. சர்வதேச ஒத்துழைப்பு இருந்தால் பல விடயங்களை சாதித்துக்கொள்ளலாம். குறிப்பாக நல்லாட்சியின்போது நாம் அதனை செய்தோம். மின்சாரக் கதிரை அபாயத்திலிருந்து மஹிந்தவைப் பாதுகாத்தோம்.

ஆனால், இந்த அரசால் சர்வதேச ஆதரவைப் பெற முடியாதுள்ளது. எதிர்வரும் மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை மீண்டும் கூடவுள்ளது. இம்முறை அதனை ஆட்சியாளர்கள் எவ்வாறு சமாளிப்பார்கள் எனத் தெரியவில்லை, இம்முறை தீர்மானம் நிறைவேற்றிக் கொண்டி ருக்கமாட்டார்கள், நடைமுறைக்கு சாத்தியமான நடவடிக்கையில் இறங்குவார்கள். ஏனெனில் தீர்மானம் நிறைவேற்றி பயனில்லை என்பதை அறிந்துள்ளனர். இது தொடர்பில் நான் வெளிவிவகார அமைச்சருக்கு அறிவித்துள்ளேன்” - என்றார். (இ)

# இலங்கையை மீட்டெடுக்க இராணுவ ஆட்சி வேண்டும்

## ஞானசார தேரர் வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 27

“நெருக்கடி நிலைமைகளிலிருந்து நாட்டை மீட்க வேண்டுமென்றால் அடுத்த சில ஆண்டுகளுக்கு நாட்டை இராணுவத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்பதே எனது தனிப்பட்ட நிலைப்பாடாகும். அதுமட்டுமல்ல இராணுவ ஆட்சி எனக் கூவிக்கொண்டு ஜனநாயகக் கதைகளைக் கூறி வருவோரை சிறையில் அடைக்க வேண்டும்.”

- இவ்வாறு பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளரும், ‘ஒரே நாடு - ஒரே சட்டம்’ தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவருமான கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.



“இலங்கை சிங்கள - பௌத்த நாடு என்பதை ஏற்றுக்கொண்டால் தமிழர்களாலும் ஆட்சியை நடத்த முடியும். நீதி அமைச்சர் பதவியிலிருந்து அலி சப்ரி உடனடியாக நீக்கப்பட வேண்டும்” எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு வார இதழொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இந்த விடயத்தைக் கூறியுள்ளார். (இ)

# சங்குகளுடன் ஒருவர் கைது!

புத்தளம், டிசெ. 27

புத்தளம், 4ஆம் கட்டை ரஹ்மத் நகர் பகுதியில் அனுமதிப் பத்திரமில்லாமல் சட்டவிரோதமாக வீட்டில் மறைத்து வைத்திருந்த ஒரு தொகை கடற்சங்குகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலுக் கமைய மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நவடிக்கையின் போதே, 3 உரைகளில் மறைத்து வைத்திருந்த 487 கடற்சங்குகள் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடற்சங்குகள் இந்தியாவுக்கு இரகசியமாக விற்பனை செய்வதற்குக் கொண்டு செல்லப்படவிருந்தன என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குறித்த கடற்சங்குகள் கற்பிட்டி மற்றும் மன்னார் பகுதிகளிலிருந்து கொண்டுவரப்பட்டுள்ளன என்று பொலிஸார் குறிப்பிட்டனர். (இ)

# நைஜீரியாவை அரசு நாடுவது மகா தவறு

## ஆளுங்கட்சி எம்.பி. சந்திம விசனம்

கொழும்பு, டிசெ. 27

“நைஜீரியா நாட்டிலிருந்து மசகு எண்ணெயைப் பெற்றுக் கொள்வதற்கு எடுக்கப்பட்டுள்ள முடிவு மகா தவறாகும். அந்நாட்டு நிறுவனத்திடம் வெளிப்படைத்தன்மை இல்லை.”

-இவ்வாறு ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினரான சந்திம வீரக்கொடி தெரிவித் தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

“நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்னைகளில் 75 வீதமானவை இந்த அரசாலே ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட பிரச்னைகளாகும். குறிப்பாக மசகு எண்ணெய் இறக்குமதிக்கான விலைமனுகோரல் தொடர்பில் நைஜீரிய நிறுவனத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு முன்னர் அது தொடர்பில் ஆழமாக சிந்தித்



திருக்க வேண்டும்.

பெற்றோலியவளத்துறை அமைச்சராக நான் இருந்துள்ளேன். நைஜீரிய நிறுவனத்துடன் கொடுக்கல் - வாங்கலில் ஈடுபட முடியாது என்பதை உணர்ந்தேன். அந்நாட்டு நிறுவனத்திடம் வெளிப்படைத் தன்மை இல்லை. எனவே, எந்த அடிப்படையில் ஒப்பந்தத்தை இவர்கள் (அரசு) கைச்சாத்திட்டார்கள் எனத் தெரியவில்லை” - என்றார். (இ)

# ஜனவரி முதல் வீட்டுத் தோட்டங்களில் காய்கறிகளைக் கட்டாயம் பயிரிடுங்கள்

## வர்த்தக அமைச்சர் பந்துல கோரிக்கை

கொழும்பு, டிசெ. 27

எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் தமது வீட்டுத் தோட்டங்களில் ஏதாவது காய்கறிகளைக் கட்டாயம் பயிரிட்டுக் கொள்ளுமாறு வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பு சம்பந்தமாக செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“இரண்டாம் உலகப் போர் நடந்த காலத்திலும் உணவுப் பஞ்சம் ஏற்பட்டது.

அனைத்து வீடுகளிலும் மிளகாய் செடிகள், கத்தரிக்காய் செடிகள், பசலைக் கீரை போன்றவற்றைப் பயிரிடுங்கள். அவற்றைக் குறுகிய காலத்தில் பயன்பாட்டுக்கு எடுக்க முடியும். துரித பயிர்ச்செய்கை குறித்த யோசனையை நாங்கள் முன்வைத்துள்ளோம்.

ஜனவரி மாதம் முதல் வீட்டுத் தோட்டங்களில் ஏதாவது ஒன்றைக் கட்டாயம் பயிரிட்டுக் கொள்ளுங்கள்” - என்றார். (இ)

## உறவுகள்...

தோரை நினைவுகூர்ந்தனர்.

2004 டிசெம்பர் 26ஆம் திகதி இந்து சமுத்திரத்தின் சுமாத்திராத் தீவு அருகே ஏற்பட்ட நிலநடுக்கத்தால் சுனாமி பேரலை உருவானது. இதனால், இலங்கையில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உட்பட 14 மாவட்டங்களை சேர்ந்த சுமார் 35 ஆயிரம் பேர் உட்பட இந்தோனேசியா, இந்தியா, மலேசியா, மாலைதீவு உள்ளிட்ட நாடுகளில் 2 இலட்சத்து 30 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். பல ஆயிரம் கோடி பெறுமதியான சொத்துக்கள் அழிவடைந்தன.

பேரலை அனர்த்தம் ஏற்பட்ட 17ஆவது ஆண்டு நினைவுதினமான நேற்று உயிரிழந்த சொந்தங்களை தமது சமய, இன வழக்கங்களின்படி நினைவுகூர்ந்தனர்.

**யாழ்ப்பாணத்தில்...**

யாழ்ப்பாணத்தில் பிரதான நிகழ்வு ஆழிப்பேரலையால் அதிகளவானோர் உயிரிழந்த வடமராட்சி கிழக்கில் இடம்பெற்றது. உடுத்துறை, மணல்காடு நினைவிடங்களில் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன. அத்துடன், யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் ஆகிய இடங்களில் நினைவேந்தல்கள் இடம்பெற்றன. தவிர, ஆலயங்கள், தேவாலயங்களில் விசேட பூசைகள் ஆராதனைகளும் இடம்பெற்றன.

**முல்லைத்தீவில்...**

முல்லைத்தீவு, கள்ளப்பாடு, புதுக்குடியிருப்பு சுனாமி நினைவாலயங்களில் நேற்று காலையும், முள்ளியவளை - கயவட்டை சுனாமி நினைவாலயத்தில் நேற்று மாலையும் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன. இங்கும், சைவ - கத்தோலிக்க முறைப்படி நிகழ்வுகள் இடம்பெற்றன.

**மட்டக்களப்பில்...**

மட்டக்களப்பு திருச்செந்தூர், கல்லடி, நாவலடி, கடலூர், காத்தான்குடி, பெரிய கல்லாறு, ஒம்தாச்சிமடம் ஆகிய பகுதிகளில் கடற்கரைகளிலும், ஆலயங்கள், தேவாலயங்கள் பள்ளிவாசல்கள், விகாரைகளிலும் விசேட பூசை ஆராதனைகள், பிரார்த்தனைகள் இடம்பெற்றன.

**அம்பாறையில்...**

அம்பாறை மாவட்டத்தில் கல்முனை, காரைதீவு, பாண்டிருப்பு, திருக்கோவில் பகுதிகளில் உயிரிழந்தோர் நினைவாக சுடர் ஏற்றி - அஞ்சலி உறவுகள் செலுத்தினர்.

தவிர, கிளிநொச்சி, மன்னார், வவுனியா, திருகோணமலை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் உயிரிழந்தோர்களை அவர்களின் நினைவிடங்களில் உறவுகள் நினைவுகூர்ந்தனர். இதேநேரம் நேற்றைய தினம் மலையகம் உட்பட நாட்டின் ஏனைய மாவட்டங்களிலும் இரு நிமிடங்கள் மக்கள் அஞ்சலி செலுத்தினர். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அலரிமாளிகையில் பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷவுடன் இணைந்து சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வெளிநாட்டவரை...

தமது நாட்டு பாதுகாப்புப் பிரிவின் சான்றிதழைப் பெற வேண்டும் என பதிவாளர் நாயகம் திணைக்களம் வெளியிட்டுள்ள புதிய சுற்றுநிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையர் திருமணம் செய்யும் வெளிநாட்டவர், இறுதி 06 மாதங்களுக்குள் எவ்வித குற்றவியல் குற்றச்சாட்டையும் எதிர்நோக்கவில்லை என்பது அந்தச் சான்றிதழில் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

அதனைத் தொடர்ந்து இலங்கைப் பிரஜை அல்லது அவர் சார்பான ஒருவரால் மாத்திரம், அந்தச் சான்றிதழ் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் சிவில் பதிவுகள் பிரிவில் ஒப்படைக்கப்பட வேண்டும்.

பின்னர் அந்தச் சான்றிதழ் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் சிவில் பதிவுகள் பிரிவூடாக பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பப்படும்.

பாதுகாப்பு அமைச்சு வழங்கும் அறிக்கைக்கு அமைய பதிவாளர் நாயகத்தினால் திருமணத்திற்கான அனுமதி, மேலதிக மாவட்ட பதிவாளருக்கு அனுப்பி வைக்கப்படும்.

இதனையடுத்து, திருமணப் பதிவுக்கான அனுமதி கிடைப்பதுடன் இந்தச் சட்டத்திற்கு அமைய மேலதிக மாவட்டப் பதிவாளர் நாயகத்திற்கு சில ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

அவையாவன, செல்லுபடியாகும் கடவுச்சீட்டு, அதன் பிரதி மற்றும் செல்லுபடியாகும் வீசா, வெளிநாட்டவரின் சிவில் நிலைமையை உறுதிப்படுத்தும் அந்நாட்டு சான்றிதழ், பதிவாளர் நாயகத்தினால் வழங்கப்படும் அனுமதிப் பத்திரம், வெளிநாட்டவரால் தயாரிக்கப்பட்ட தமது சுகாதார நிலைமை தொடர்பான அறிக்கை, பிறப்புச் சான்றிதழ் மற்றும் அதன் பிரதி

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக பாதுகாப்பு அமைச்சால் இந்தப் புதிய நிபந்தனை அறிவிக்கப்பட்டுள்ளதாக பதிவாளர் நாயகம் டபிள்யூ. எம். எம். பி. வீரசேகர தெரிவித்தார்.

போதைப்பொருள் கடத்தல் மற்றும் நிதித்தூய்தாக்கலுடன் தொடர்புடைய வெளிநாட்டவர்கள், இலங்கையர்களைத் திருமணம் செய்வதைத் தடுப்பதற்காக புதிய நிபந்தனை அறிவிக்கப்பட்டுள்ளதாக பதிவாளர் நாயகம் மேலும் கூறினார். (ஐ)

## அரசாங்கம்...

இன்று "உழவுப் போர்" பற்றி பேசினாலும், நாட்டில் "பஞ்ச யுத்தம்" ஏற்பட்டுள்ளது. தன்னிச்சையான முடிவுகளின் காரணமாக நாட்டின் விவசாயத்தை அழித்த அரசாங்கம், வீடு வீடாக எரிவாயு சிலிண்டர் வெடிக்கும் நாடாக இந்த நாட்டை மாற்றியுள்ளது. சில அமைச்சர்கள் மக்களுக்கு நிவாரணப் பொதி கொடுப்போம் என்று தம்பட்டம் அடித்தாலும், மனச்சோர்வு, பணவீக்கம், துக்கம், கண்ணீர் மற்றும் வலி ஆகியவை மட்டுமே கொடுக்கப்பட்ட ஒரே நிவாரணப் பொதி. 17 வருடங்களுக்கு முன்னர் இயற்கை அனர்த்தமாக வந்த சுனாமி அனர்த்தம் இந்த நாட்டில் ஆயிரக்கணக்கான மக்களின் வாழ்வை அழித்து விட்டது என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், தற்போதைய அரசாங்கம் இயற்கை அனர்த்தத்திற்குப் பதிலாக, தாங்களே உருவாக்கிய பேரழிவைக் கொண்டு நாட்டை அழிவுக்கு இட்டுச் சென்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அன்று இயற்கை சுனாமியில் பல்லாயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர். இன்று "பொஹொட்டு சுனாமி"யால் முழு நாட்டு மக்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். நாட்டில் நடந்து கொண்டிருப்பது வெள்ளை டை கொள்ளை என தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர், தமக்கோ அல்லது ஐக்கிய மக்கள் சக்திக்கோ மக்களுடனான டீல் மட்டுமே உள்ளது என்றும் அவர் கூறினார்.

நேற்று அம்பாந்தோட்டை பகுதியில் மனிதாபிமானத்தின் பயணம் நிகழ்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போதே சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஐ)

## சுற்றுலா சென்ற...

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

ஆனைக்கோட்டையிலிருந்து வாகனம் ஒன்றில் இளைஞர்கள் சிலர் கௌதாரி முனைக்கு சென்றுள்ளனர். இதேபோன்று காரைநகரிலிருந்து இன்னொரு குழுவினர் படகு மூலம் அந்தப் பகுதிக்கு சென்றுள்ளனர்.

இருவரும் மது விருந்தில் பங்கேற்ற நிலையில் இரு குழுக்களிடையேயும் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் மோதலாக மாறியது. இதன்போது, கூரிய ஆயுதத்தால் இளைஞர் தாக்கப்பட்டதில் படுகாயமடைந்த அவர் பூநகரி பிரதேச மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். எனினும், அவர் அங்கு உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

மோதலில் ஈடுபட்ட இரு தரப்பினரையும் கைது செய்யும் நடவடிக்கையில் பூநகரி பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (ஐ - 5)

# பொறுப்பற்ற தரப்பிடம் ஆட்சி; நாட்டு மக்கள் நிர்க்கதிநிலை!

## அரசை சாடுகிறது ஜே. வி. பி.

கொழும்பு, டிசெ. 27

பொறுப்பற்ற தரப்பினரிடம் ஆட்சியதிகாரம் உள்ளதால் நாட்டு மக்கள் நிர்க்கதியாகியுள்ளார்கள் என்று மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் டில்வின் சில்வா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துக் கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அரசாங்கத்தின் தவறான நிர்வாகத்தினால் நாடு பாரிய நிதி நெருக்கடியை தற்போது எதிர்க்கொண்டுள்ளது. தோற்றம் பெற்றுள்ள பிரச்னைகளுக்கு தீர்வு காணும் நிர்வாகக் கொள்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு கிடையாது. சிறந்தவர்களின் ஆலோசனைகளுக்கு ஜனாதிபதி மதிப்பளிப்பதில்லை.

நாடு நிதி நெருக்கடியை எதிர்க்கொண்டுள்ள நிலை உள்ளதால் பொது மக்கள் அத்தியாவசிய பொருட்களை பெற்றுக் கொள்வதில் பெறும் சிரமங்களை எதிர்க் கொள்கிறார்கள்.

அத்தியாவசிய பொருட்களை பெற்றுக் கொள்வதற்கு காலையில் இருந்து வரிசையில் நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பொது மக்கள் அன்றாட வாழ்க்கையை நடத்துவதற்கு போராடிக் கொண்டிருக்கும் நிலையில் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ தனது குடும்பத்தாரை காண அமெரிக்கா சென்றுள்ளார்.

மறுபுறம் பல அமைச்சர்கள் விடுமுறையை கழிப்பதற்கு வெளிநாடுகளக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார்கள். பொறுப்பற்ற தரப்பினரிடம் ஆட்சியதிகாரம் உள்ள காரணத்தினால் மக்கள் நிர்க்கதிக்குள்ளாகியுள்ளார்கள் -என்றும் சொன்னார். (ஐ)

# விபத்தில் வயோதிபர் மரணம்!

கொழும்பு, டிசெ. 27

புஸல்லாவை, வகுவப்பிட்டிய சரஸ்வதி மத்திய கல் லூரிக்கு அருகாமையில் நேற்று முற்பகல் இடம்பெற்ற விபத்தில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

திஸாநாயக்க முதியன்சலாகே ரூபானந்த (வயது - 70) என்வரரே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

நுவரெலியா, ருவான்புரவில் இருந்து கண்டி நோக் கிச் சென்ற ஓட்டோ ஒன்று, வகுவப்பிட்டிய பகுதியில் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் ஒன்றுடன் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

ஓட்டோவில் பயணித்த கர்ப்பிணிப் பெண் தெய்வா தீனமாகக் காயங்களின்றி உயிர் தப்பினர். அவர் மருத்துவ பரிசோதனைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவரின் மாமாவே விபத்தில் உயிரிழந்தார். (இ)

## நிரந்தர பௌத்த...

இராணுவத்தினரின் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் இந்த நிரந்தரக் கட்டுமானப் பணிகளை பழமையான முறைமைகளுடன் தொல்பொருள் திணைக்களத்தின் வழிகாட்டலில் மேற்கொள்ளப்படுகின்றன என்று அறிய வருகின்றது.

முல்லைத்தீவு - குமுழமுனை - குருந்தூர்மலையில் சைவ மக்கள் வழிபட்டு வந்த இடத்தை பௌத்த தொல்லிடம் என்று தொல்பொருள் திணைக்களம் என்று கூறி அந்தப் பகுதியைக் கைப்பற்றியது. இந்த ஆண்டு தொடக்கத்தில் இராணுவத்தினரின் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் ஊடகங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்ட நிலையில், சுமார் 4 மாதம் முன்னெடுக்கப்பட்ட ஆய்வு முடிவில் அது பௌத்த தொல்லிடம் என்று தொல்பொருள் திணைக்களம் அறிவித்தது.

கொரோனா கட்டுப்பாடுகளுக்கு மத்தியிலும் பெரும் எடுப்பில், படையினரின் ஏற்பாட்டில் குருந்தாவசோக ராஜ்மாஹா விகாரைக்கான பிரித்ஓதல் வழிபாடுகள் இடம்பெற்று விகாரை பூசைகள் தொடங்கி வைக்கப்பட்டன.

இந்த நிலையில், சைவர்களின் வழிபாட்டு உரிமையை மறுக்கக்கூடாது, அங்குள்ள சைவ வழிபாட்டு அடையாளங்கள் அகற்றப்படக்கூடாது என்று முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

இதைத் தொடர்ந்து, அந்தப் பகுதியில் நிரந்தரமான நிர்மாணப் பணிகள் எவையும் மேற்கொள்ளக்கூடாது என்று நீதிமன்றம் கட்டளை பிறப்பித்தது.

ஆனாலும், குருந்தூர் மலையில் கடந்த ஜூன் 16ஆம் திகதி அங்கு கட்டடம் ஒன்று நிறுவுவதற்கான அடிக்கல் ஒன்றும் நாட்டப்பட்டதோடு, மீண்டும் அப்பகுதிக்கு மக்கள் பிரதிநிதிகள் உட்பட எவருக்கும் அனுமதி முற்றாக மறுக்கப்பட்டது.

இந்நிலையில் தமிழர்களின் பூர்வீக வழிபாட்டிடமான குருந்தூர்மலையை பௌத்த மயப்படுத்த தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வட மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் து.ரவிகரனால் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் எம்.பியின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. இதனையடுத்து கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குறித்த விடயம் தொடர்பில் வழக்கு தாக்கல்செய்யப்பட்டது.

இந்த வழக்கு விசாரணைகள் கடந்த பத்தாம் திகதி முதல் ஆரம்பமாகின. இந்த நிலையில், குருந்தூர் மலையில் தொடர்ந்தும் பௌத்த சின்னங்களை நிறுவும் வகையிலான நிர்மாணப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று தெரிய வருகின்றது. (ஐ)

## பேருந்து...

விலை அதிகரிப்பு தொடர்பில் நாளை மறுநாள் புதன்கிழமை தீர்மானம் எடுக்கப்படும். அண்மைய எரிபொருள் விலை உயர்வுக்கு அமைவாகப் பேருந்துக் கட்டணத்தை அதிகரிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ஐ)

## தொற்றுக்கு...

பெண்கள் என 4 பேரும், 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 7 ஆண்கள், இரு பெண்கள் என 9 பேருமாக 13 பேர் உயிரிழந்தனர் என்று அறிய வருகின்றது.

இந்த மரணங்களுடன் நாட்டில் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 884 ஆக அதிகரித்துள்ளது. (ஐ)

## மாணிக்கவிநாயகம்...

தொடர்பான பாடல்கள், ஈழத்தமிழர்களால் வெளியிடப்பட்ட இசை இறுவட்டுக்களிலும் பாடல்கள் பலவற்றை பாடியுள்ளார்.

தென்னிந்திய திரைத்துறையில் தில் என்ற படத்தின் மூலம் அறிமுகமான அவர் எண்ணூறுக்கும் அதிகமான பாடல்களைப் பாடியுள்ளார். உயிரிழக்கும்போது அவருக்கு வயது 73.

மாணிக்க விநாயகம் தென்னிந்தியாவின் பிரபல பரதநாட்டிய ஆசிரியரான வழுவூர் ராமையாபிள்ளையின் மகன் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# தம்மை தேசப்பற்றாளர் என்போர் வெளிநாடுகளுக்கு படையெடுப்பு

## ஐக்கிய தேசியக் கட்சி விசனம்



கொழும்பு, டிசெ. 27

வெளிநாட்டு சக்திகள் என்று முத்திரை குத்தப்பட்ட ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர்கள், மக்களின் நிலைமையை உணர்ந்து நாட்டில் இருக்கும் போது தேசப்பற்றுள்ள தலைவர்கள் என்று கூறுபவர்கள் விடுமுறையை கழிப்பதற்காக வெளிநாடுகளுக்கு படையெடுத்துள்ளனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் உபதலைர் அகில விராஜ் காரியவசம் விமர்சித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர்,

கூறப்படும் பொய்களை நம்பி ஏமாறாமல் உண்மையான தேசப்பற்றாளர்கள் யார் என்பதை மக்கள் நன்கு புரிந்துகொள்ள வேண்டும்.

சுபீட்சத்தின் நோக்கை நடைமுறைப்படுத்துவதாகக் கூறி ஆட்சிக்கு வந்த அரசாங்கம் இன்று நாட்டில் பயங்கரமான நிலைமைகளை தோற்றுவித்துள்ளது. மூன்று விதமான அச்சம் சமூகத்தில் பரவத் தொடங்கியுள்ளது.

பஞ்சம் ஏற்படும் என்ற அச்சம், நோய் அச்சம், மனிதாபிமானமற்ற செயல்களால் ஏற்படும் அச்சம் என்ற மூன்று விதமான அச்சங்களே தற்போது சமூகத்தில் தோற்றம் பெற்றுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (கே)







# நாடு அழிய வேண்டும் என்பதே எதிரணியினரின் பிரார்த்தனை

## அமைச்சர் ஜோன்ஸ்டன் குற்றச்சாட்டு



கொழும்பு, டிசெ. 27

**"எம்முடன் இணைந்து நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற தேவை எதிர்க்கட்சியினருக்கு இல்லை. நாடு எப்படியாவது அழிந்துபோகட்டும் என்பதே அவர்களின் பிரார்த்தனையாக இருக்கின்றது."**

- இவ்வாறு அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

மகநெகும அவிருத்தித் திட்டத்தைப் பார்வையிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"அந்நிய செலாவணி கையிருப்பில் இல்லாது போனால், அரசு வீழ்ந்துவிடும். எனினும், நாங்கள் அப்படி நடக்க இடமளிக்கமாட்டோம். எம்மால் திறமையாக அரசைக் கையாள முடியும். அந்நியச் செலாவணி கையிருப்பில் இருந்து குறைவதை எதிர்க்கட்சிகள் விரும்புகின்றன.

அநுர மற்றும் சஜித் ஆகியோரின் அணிகள் அரசு கவிழும் என கனவு காண்கின்றனர். நாட்டில் பொருட்களின் விலைகள் அதிகரிப்பதை எதிர்க்கட்சிகள் விரும்புகின்றன.

அப்போது மக்கள் அவர்களின் பக்கத்துக்குச் சென்று வாக்களித்து அரசை அமைக்க உதவுவார்கள் என நினைக்கின்றனர்.

ஒருவர் காணொலி ஒன்றைப்பதிவிட்டு வங்கிகளில் இருந்து பணத்தைத் திரும்பப் பெறுமாறு கூறுவதை நான் பார்த்தேன். இந்த நாடு வங்குரோத்து அடைந்து விடும்.

இவை அனைத்துக்கும் பின்னால் எதிர்க்கட்சியினரே இருக்கின்றனர். அவர்களுக்கு ஆட்சிக்கு வந்து ஆட்சி நடத்த நாடு இருக்க வேண்டும்.

எம்முடன் இணைந்து நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற தேவை எதிர்க்கட்சியினருக்கு இல்லை. நாடு எப்படியாவது அழிந்துபோகட்டும் என்பதே அவர்களின் பிரார்த்தனையாக இருக்கின்றது.

நாட்டின் பொருளாதாரம் மேலும் முன்னேற்றமடைய வேண்டும் என்பதே எமது பிரார்த்தனை. நாட்டு மக்களின் வாழ்க்கையைப் பாதுகாத்து சிறந்த நாட்டை உரு வாக்க முடியும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது. உலகம் என்ற வகையில் நாம் இந்த அனர்த்தத்தில் இருந்து மீள முடியும்" - என்றார். (இ)

# தொழிற்சங்கத்துக்காக ஒன்றுபட நாம் தயார்; நீங்கள் தயாரா?

## இராதாகிருஷ்ணன் எம்.பி. கேள்வி



ஹற்றன், டிசெ. 27

"இன்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தொழிலாளர்களின் நன்மை கருதி அனைத்துத் தொழிற் சங்கங்களும் ஒன்றிணைந்து செயல்பட முன்வர வேண்டும் என்ற கருத் தைத் தெரிவித்துள்ளது. இந்த விட யத்தை நாங்கள் மலையக மக்கள் முன்னணியாகவும் தமிழ் முற் போக்கு கூட்டணியாகவும் கடந்த காலங்களில் வலியுறுத்தி வந்திருக்கின்றோம். இதனை நாங்கள் வரவேற்கின்றோம்."

- இவ்வாறு நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் செயலாளரும் இரா ஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தொழிலாளர்களின் நலன் கருதி தொழில் சங்கங்கள் ஒன்று பட வேண்டும் என கூறியிருக்கின்றமை தொடர்பாக நேற்று ஹற்றன் டிக்கோயா வனராஜாவில் நடைபெற்ற கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கின்றபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இன்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தொழிலாளர்களின் நன்மை கருதி அனைத்துத் தொழிற் சங்கங்களும் ஒன்றிணைந்து செயல்பட முன்வர வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்துள்ளது. அதனை நான் வரவேற்கின்றேன்.

ஆனால், இந்த விடயத்தை நாங்கள், அதாவது மலையக மக்கள் முன்னணியாகவும் தமிழ் முற்போக்குக் கூட்டணியாகவும் கடந்த காலங்களில் வலியுறுத்தி வந்திருக்கின்றோம்.

அன்று அதனைக் கண்டுகொள்ளாதவர்கள், இன்று அதே விடயத்தைப் பேசுகின்றார்கள். இது காலம் கடந்த ஞானமாக இருந்தாலும் பரவாயில்லை, நாங்கள் தொழிலாளர்களுக்காக இணைந்து செயல்படுவதற்கு எப்போதும் தயாராகவே இருக்கின்றோம்.

எனவே, அரசுடன் இணைந்திருக்கின்ற இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸே இதற்கான முன்னெடுப்புகளை செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் நாங்கள் இணைந்து செயல்படுவதற்குத் தயாராகவே இருக்கின்றோம்" - என்றார். (இ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.12.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்




6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
7.05 மணி : உளவியல் கருத்து-
உளவளத்துனையாளர் நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர்
விவியன் சத்தியசீலன்
07.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : கொழும்பு-16-மறு ஒளிபரப்பு
11.30 மணி : மனிதனின் மறுபக்கம்

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
நகைச்சுவை நிகழ்ச்சி
1.00 மணி : அறிந்தும் அறியாமலும்
( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-வேட்டை,விவேகம்
திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை
மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : ரெயிலர் ரைம்
6.30 மணி : நலந்தானா



**இரவு**
7.00 மணி : சொற்சமர் -பாடசாலை
மாணவர்களுக்கா விவாத நிகழ்ச்சி




8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
9.30 மணி: ஹலோ கோடம்பாக்கம்
10.00 மணி : நேருக்கு நேர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி :கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இந்த வார புனிதர் (யாழ்ப்பாணம்)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : ஞானவழி (மறு ஒளிபரப்பு சனி)
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறுஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : விவிலியம் அறிவோம்
(திருகோணமலை) ஞாயிறு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்) மறு ஒளிபரப்பு
04.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு) மறுஒளிபரப்பு
05.00 மணி: திருப்பலி (திருகோணமலை)
மறுஒளிபரப்பு
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறுஒளிபரப்பு)
07.00 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள்
மறு ஒளிபரப்பு
7.30 மணி : இந்த வார புனிதர் (யாழ்ப்பாணம்)
மறு ஒளிபரப்பு

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு